THE M. M. SECONDARY SCHOOL, ALANDUR

Magazine

Vol. 6 April - 56

EDITORIAL BOARD

Sri	A. PAUL WILLIAM	Editor
,,	O. PADMANABHA NAIDU	Associate Editor
,,	M. PALANIMUTHU	,,
,,	S. RANGANATHAN	,,
Mrs.	S. BALRAJ	Members
Sri	VICTOR BACKIANATHAN	,,
Sri	M. CHRISTIAN JOSEPH	,,

CONTENTS

No.	Title	Author	Page,
1.	Headmaster's Annual Report		... 1
2.	Our School History		... 6
3.	Reception to Eminent Visitors (Photos)		... 7
	Reports of Activities: (1955—56)		... 8
4.	Staff Council	Sri G. I. Edward Stephen	... 9
5.	Masters Association	Mrs. S. Balraj	... 9
6.	The English Literary Association	Sri O. Padmanabha Naidu	... 10
7.	Audio-Visual Education	Sri S. Joseph Muthu	... 11
8.	Guides and Blue Birds	Mrs. S. Balraj & Mrs. S. Victor	... 12
9.	Citizenship Activities	Sri V. Backianathan	... 13
10.	Art and Handwork	Sri M. Christian	... 14
11.	Science Club	Mahamed Haroon II A	... 14
12.	Fine Arts Society	Sri V. Backianathan	... 15
13.	Physical Education	Sri N. I. S. Kalyanasundaram Sri Moses Ebenezer	... 15
14.	Cubbing	Sri T. G Devanesan & Sri Moses Ebenezer	... 17
15.	Senior Tamil Association	Sri M. Palanimuthu	... 18
16.	Junior Tamil Association	Sri V. Backianathan	... 19
17.	Photos	,,	
18.	நாட்டின் நாணயங்கள்	திரு. சா. மோசஸ் எபிநேசர்	... 21
19.	வழிகாட்டி	திரு. ம. பழநி முத்து	... 22
20.	" வறியார்க்கு ஒன்றீவதே ஈகை	Mrs. விக்டர்	... 24
21.	குடியரசு தினம்	திரு. ஸேவியர் செலஸ்டின்	... 25
22.	அதிசயங்கள்! உங்களுக்குத் தெரியுமா?	Mrs. பால்ராஜ்	... 26
23.	அன்றும் இன்றும்		
24.	நான் யார்?	L. புருஷோத்தமன் III A	... 29
25.	திருடன்! திருடன்! திருடன்!	L. R. ஜயச்சந்திரன் I C	... 30
26.	உலகம் காட்டும் உண்மைகள்	பொ. கேசவராஜன் III A	... 31
27.	Photos (By Sri Victor Backianathan)		33
28.	ஓர் இரவு	திரு. தேவதாசன்	... 35
29.	மூடத் தவளைகள்	K. பாலசுந்தரம் I C	... 36
30.	மணி அடிக்குது ஓடிவா	ஜோதி I B	... 37
31.	அடையாற்றின் ஆலமரம்	R. கோவிந்தராஜ்	... 37
32.	பள்ளி சாரணப் படை	திரு. ஜி. வி. பாலையா	... 37
33.	Notes		... 38

OUR CONGRATULATIONS!

Sri. O. Padmanabha Naidu

(Who joined our School as an assistant in the year 1924 and has completed 32 years of useful service.)



Sri. Joseph Thangaraj

(Who joined our School as an assistant in the year 1930 and has completed 26 years of useful service.)

At Thirukalukundram Hills



At Mahabalipuram



Staff at Poondi Reservoir

Athletic Meet. 1956 at Mohite
Stadium Houses Assemble

M. M. SECONDARY SCHOOL, ALANDUR MAGAZINE.

Vol. 6 1955-56

ஆண்டு அறிக்கை.

அன்புமிக்கத் தலைவர் அவர்களே, மெக்குவீன் அம்மையாரவர்களே, பெரியோர்களே, மாணவ மாணவிகளே!

ஆண்டவருடைய மகத்தான அருளால் இப்பள்ளி 91 ஆண்டுகளைக் கடந்து 92-வது ஆண்டை அடைந்துள்ளது. ஒருவன் தனது வாழ்க்கையில் தன் பிறந்த தினத்தை அடையும்போது அவன் தன் வயதை நினைவு கூர்ந்து, நன்றி கலந்த மகிழ்ச்சியுடன் அந்நாளைக் கழிப்பதைபோல 92-வது ஆண்டை அடைந்த இப் பள்ளியின் ஆண்டு விழாவில் ஆசிரியர்களும் மாணவர்களுமாகிய நாங்கள் இப் பள்ளியின் பழமையை நினைத்து மகிழ்வெய்துகின்றோம்.

தலை நிமிர்ந்து நிற்க விரும்பும் மக்கள் சமுதாயத்திற்கு வளர்ச்சி மிக இன்றி யமையாதது. அவ்வளர்ச்சிதான் முன்னேற்றத்தின் அறிகுறியாகும். இவ் வளர்ச்சியில் இப்பள்ளியானது தன் நோக்கங்களை நிறைவேற்றுவதிலும் எதிர் கால வாழ்க்கைக்குத் தேவையான பண்புகளைப் பயிற்றுவிப்பதிலும் அவர்களுடைய பள்ளி வாழ்க்கை சிறந்ததாகவும் பயனுள்ளதாகவும் இன்புற்றும் இருக்க வேண்டும் என்ற நோக்கத்தை ஈடு செய்வதிலும் பள்ளியின் காலச் சக்கரத்தில் இவ்யாண்டு சிறந்ததோர் ஆண்டாக இருந்தது என்பதை மகிழ்ச்சியோடு கூறுகின்றோம். இவற்றிற்கெல்லாம் சிறந்த காரணம் ஆசிரியர்களுடைய உண்மையான ஒத்துழைப்பும் உற்சாகமும் மாணவர்களிடையே காணப்படும் ஊக்கமும் நற்பண்புகளுமேயாகும்.

புதிதாகச் சேர்க்கப்பட்ட மாணவர்கள் பலதிறப்பட்ட பள்ளிகள், ஊர்கள், சுற்றுப்புறங்கள் இவற்றைச் சேர்ந்தவர்களாயினும் இங்கு வந்தவுடன் ஓர் குறித்த நாளில் பள்ளியின் சட்ட திட்டங்கள் அவர்களுக்கு விளக்கமாகப் போதிக்கப்பட்டு பழைய மாணவர்களோடு வரவேற்கப்படுகின்றார்கள். கூடிய சீக்கிரம் உணர்ச்சியால் உந்தப்பட்டு, எல்லா மாணவர்களும், சகோதரத்துவம்

என்னும் உயர்ந்த தன்மையைப் பெறுகின்றனர். ஒருவரை ஒருவர் பார்த்து முன்னேற்றம் அடைவதில் ஆர்வம் காட்டுகின்றனர். இதற்கு முக்கியமான எடுத்துக்காட்டாக இருப்பது பள்ளியுடை (School Uniform) ஆகும். இவ்யாண்டின் துவக்கத்திலேயே அநேக மாணவர்கள் தங்கள் பள்ளியுடையைத் தயார் செய்து விசேஷித்த தினங்களிலும் கொடியேற்று விழாக்களிலும் குறிப்பாக ரஷ்ய பிரதமர், நேப்பாள தேச மன்னர், உலகப் பிரசித்திப் பெற்ற ஜெஸ்ஸி ஓவன்ஸ் முதலியோர்கள் சென்னை வந்தபோது மாணவர்கள் தங்கள் பள்ளியுடையோடு வரவேற்பளித்தனர். இத்தகைய காட்சிகள் குறிப்பிடத்தக்கதும் மகிழ்ச்சியையூட்டுவதுமாகும். இவற்றிற்கெல்லாம் மூல காரணமாயிருந்த பெற்றோர்களையும் ஆசிரியர்களையும் பெரிதும் பாராட்டுகிறேன். இருந்தாலும் ஒரு சில மாணவர்கள் பள்ளியுடையற்றவர்களாக இருந்தார்கள் என்பதையும் கூற விரும்புகிறேன்.

இவ்யாண்டில் எம் பள்ளியிலுள்ள 513 மாணவர்களுள் 404 ஆண்களும் 109 பெண்களுமாவர். இவ்யாண்டின் துவக்கத்தில் ஐந்து ஆண்டுகள் தமிழாசிரியராகப் பணியாற்றி வந்த திரு. S. அருணகிரி அவர்களும் உதவி எழுத்தாளராகப் பணியாற்றி வந்த திரு. எசேக்கியல் சாயர் அவர்களும் இப் பள்ளியை விட்டு விலகினார்கள். இவர்கள் இருவரும் பொதுவாக இப் பள்ளியின் வாழ்க்கையிலும், சிறப்பாக இசைக் கழகத்தின் அலுவல்களிலும் திறமையான பங்கு பெற்று உதவி செய்தார்கள். அவர்களுக்குப் பதிலாக திரு. M. பழநி முத்து அவர்களைத் தமிழாசிரியராகவும், திரு. தேவதாஸ் அவர்களை உதவி எழுத்தாளராகவும் வரவேற்கிறோம்.

கல்வி திட்டத்தில் அடங்கியுள்ள சிறந்த பகுதிகளைப் பயிற்றுவிப்பதிலும் மாணவர்களின் கல்வி முன்னேற்றம், ஒழுக்கம் முதலிய நற் பண்புகளைப் பலவித செயல் திட்டங்களின் மூலம் நிறைவேற்றவேண்டும் என்ற நிலையைப் பூர்த்தி செய்வதிலும் இவ்யாண்டு பயனுள்ளதோர் ஆண்டாகக் கழிக்கப்பட்டது. ஜூலை மாதத் துவக்கத்திலேயே பள்ளித் தலைவன் (School Pupil Leader) துணைத் தலைவன் (Assistant School Pupil Leader) முதலியவர்கள் மாணவர்களாலேயே தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். தற்காலத் தேர்தல் முறைப்படி இது நடத்தப்படுவதால் எல்லா மாணவர்களும் சிறந்த உற்சாகத்தைக் காட்டுகின்றனர். மற்றும் வகுப்புத் தலைவர்கள் (Class Pupil Leader) பள்ளி மந்திரி சபை School Cabinet) பள்ளி பாராளும் மன்றம் (School Parliament) மாணவத் தலைவர் குழு (School Council) ஆகியவையும் வகுக்கப்பட்டு சில முறை கூடி மாணவர்களுடைய சுகாதாரம் ஒழுங்கு முதலியவற்றை மேற் பார்வையிட்டிருக்கிறது. வகுப்பின் தேவைகளையும் குறைகளையும் மாணவர்களே கண்டுணர்ந்து அவற்றைத் திறம்பட பூர்த்தி செய்தும் உல்லாசப் பிரயாணங்கள் முதலியவற்றை ஒழுங்கு செய்தும் நடைமுறையில் ஆசிரியர்களின் தக்க ஆலோசனைகளின் கீழ் செயலாற்றினார்கள். மற்றும் சமூக அறிவு, தலைமை தாங்கும் பண்பு, ஒத்துழைத்

தல் ஒன்று படல் ஆகிய சிறந்த குணங்களைப் பெற்று வாழ்க்கையில் முன்னேற இந்த அமைப்புகள் மேலும் உதவி புரிகின்றன என்பதில் ஐயமில்லை.

இவ்வாண்டில் பற்பல வகுப்புகள் பல இடங்களுக்கு உல்லாசப் பிரயாணங்கள் சென்றன. அவற்றில் சில முக்கியமான இடங்கள் :— அடையாறு கலாச்சார கல்விச் சாலை, சோப்பு தயாரிக்கும் தொழிற்சாலை, கீழ்ப்பாக்கம் தண்ணீர் நிலையம், பல்லாவரம் மலை, பொருட்காட்சி சாலை, மிருகக் காட்சி சாலை, மீனம்பாக்கம் ஆகாய விமான நிலையம், திருவான்மியூர் முதலியனவாகும். பள்ளியின் பொது உல்லாசப் பிரயாணமாக மகாபலிபுரம் என்ற சரித்திர பிரசித்திப் பெற்ற இடத்திற்கும் சென்னை ஆசிரியர் பயிற்சிக கல்லூரியில் நடந்த நூற்றாண்டு விழாக கண் காட்சி சாலைக்கும் சென்றோம். மகாபலிபுரத்திற்குச் செல்லும்போது 110 மாணவர்களும் 16 ஆசிரியர்களும் சென்றோம். அங்கே இரண்டு நாட்கள் தங்கி பல இடங்களையும் சுற்றிப் பார்த்தும் கடற்கரையில் விளையாடியும் இரவில் பர்டித்தீ நடத்தியும் மகிழ்ச்சியுடன் திரும்பினோம். தற்காலக் கல்வி கற்கும் முறையில் உல்லாசப் பிரயாணம் என்பது மிகவும் இன்றியமையாதது என்பது நம் எல்லோருக்கும் தெரிந்ததோர் உண்மை. சிறுவர்கள் இவை மூலம் பெறும் இன்பமும் இயற்கை வழி பெறுகின்ற அறிவின் பெருக்கும் அளவிடற்கரியது என்ற முறையில் பெற்றோர்களின் ஆதரவும் ஒத்துழைப்பும் மிகவும் இன்றியமையாதது என்பதை அடிக்கடி கருதுகின்றோம்.

உடற்பயிற்சி கல்வி சம்பந்தமாக மாணவர்களுக்குக் கூடிய வசதிகள் அளிக்க முயலுகின்றோம். மாணவர்கள் எப்பொழுதும் போல நான்கு குடும்பங்களாகப் பிரிக்கப்பட்டு முன்பு நிறங்களின் பெயர்களால் அழைக்கப்பட்டதை மாற்றி இவ்வாண்டு, பல ஆண்டுகளுக்கு முன் இப் பள்ளி நிர்வாகிகளாக ஊழியம் செய்து வந்த சங்கை பொருந்திய கிரிபித்ஸ் ஐயரவர்கள், சங்கை கௌடி ஐயரயவர்கள் சங்கை பிர்வுன் ஐயரவர்கள் சங்கை மோனகன் ஐயரயவர்கள் என்பவர்களின் பெயர்களால் அழைக்கப்பட்டு வருகின்றன. இம் மாறுதலை ஆசிரியர்களும் மாணவர்களும் மகிழ்ச்சியோடு வரவேற்றனர். இவ் வருடம் வாலாஜாபாத்தில் நடந்த மாவட்ட விளையாட்டுப் போட்டியில் பங்கெடுத்துக்கொண்ட மாணவர்களில் Intermediate பிரிவில் High jump-பில் முதலாவதாக வெற்றியடைந்தனர். மாவட்ட நடுத்தரப் பள்ளி விளையாட்டு போட்டிகளில் Badminton, Tennikoit என்ற இரு விளையாட்டுகளிலும் பங்கெடுத்துக்கொண்டனர். ஆனால் Batminton என்ற விளையாட்டில் மட்டும் தொடர்ச்சியாக இவ் வருடம் மூன்றும் முறையாக வெற்றி பெற்றுள்ளனர். அதற்குரிய பரிசாக நிரந்தர வெள்ளிக் கோப்பை அடுத்தாண்டு பெறுவர். Tennikoit என்ற விளையாட்டில் இரண்டாண்டு வெற்றி பெற்றும் தோல்வி காண முடிந்தது. ஆசிரியர்களுக்கென நடத்தப்பட்ட Volley Ball, Badminton விளையாட்டுகளிலும் தோல்வியே நேர்ந்தது. வருடா வருடம் இவர்கள் நல்ல முறையில் பயிற்சி பெற்று வருகிறார்கள் என்பது குறிப்பிடத் தக்கது. மாணவிகளுக்கென Net Ball,

Tennikoit, Throw Ball) என்ற விளையாட்டுகள் அளிக்கப்படுகின்றன. குடும்ப விளையாட்டுப் போட்டிகளில் ஆசிரியர்களும் மாணவர்களும் சிறந்த ஊக்கத்துடன் பங்கு பெற்று நடத்தினர். மேலும் மாணவர்களுக்கு அவ்வப்போது ஆலோசனையும் கூறி வந்தனர். இது மிகவும் பாராட்டற்குரியது.

இவ்வருடம் எங்கள் பள்ளி ஆண்டு பந்தய ஓட்டம் Mohite Stadium Military Estate Officer) தலைமையில் நடைபெற்றது. திருமதி. மத்தூர் அம்மையார் அவர்கள் வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசுகளை வழங்கினர். இப் போட்டிகளை, ஏற்கனவே திரு. மேனன் அவர்கள் (Executive Officer, Cantonment, St. Thomas Mount) துவக்கி வைத்தார்

பள்ளியில் மாணவர் பொது அறிவை விருத்தி செய்வதற்கென்று பத்திரிகை அறை, நூல் நிலையம், பள்ளி வானொலி, தமிழ் ஆங்கில இலக்கியக் கழகங்கள், விஞ்ஞானக் கழகம், நுண் கலைக் கழகம், படக் காட்சி கல்வி, இளைஞர் செஞ்சிலுவைச் சங்கம் முதலியவை குறிப்பிட்ட ஆசிரியர்களின் பொறுப்பின் கீழ் நான்கு மாணவர்களுடைய திறமையை வளர்க்க வசதிகள் அளிக்கப்படுகின்றன. படக் காட்சிக் கல்விக்கென்று வாங்கப்பட்ட 16 M. M. Silent film Projector இவ்வாண்டு பெரிதும் பயன்பட்டது.

நெசவு, நூல் நூற்றல் என்ற கைவேலையிலும், மாணவிகளுக்கென அமைக்கப்பட்டிருக்கும் வீட்டுக் கலையிலும் Pottery Painting, Fert work என்ற மற்ற கைவேலைகளிலும் ஆசிரியர்களுடைய மேற் பார்வையில் நல்ல வேலையை நடத்தியுள்ளார்கள். இன்று இங்கு அமைககப்பட்டிருக்கும் கைவேலை—கலை பொருட் காட்சி அவர்களுடைய உற்சாகத்தின் பயன் என்று கூறலாம். மாணவிகள் சுலபமாகக கற்றுக்கொண்டு தங்களின் திறமைகளை வெளிப்படுத்தும்படியாக நடனப் பயிற்சிகள் அவ்வப்போது அவர்களுககு அளிக்கப்பட்டு பள்ளியின் சிறந்த தினங்களில் அவர்கள் பங்கு பெற்று வருவது எங்களுக்கு மகிழ்ச்சியூட்டும் நிகழ்ச்சிகளாகும். அநேக மாணவிகள் இதில் சேர்ந்து பயனடைய விரும்பி அதற்கானவற்றைச் சோர்வின்றிச் செய்து, ஊககமளித்து வருபவர்களின் சேவையைப் பெரிதும் பாராட்டுகின்றோம்.

இப்பள்ளியில் நடைபெறும் ஒவ்வொரு நிகழ்ச்சியும், விழாவும். செயன் முறையும், கல்வி போதனா முறை சம்பந்தமான விஷயங்களும், மாணவர்களின் முன்னேற்றம், அவர்களின் ஏற்றத் தாழவுகள் முதலான எல்லாக் காரியங்களுமம ஆசிரியர் கழகம் (Teachers Association) ஆசிரியர் ஆலோசனைக் குழு (Staff Council) இவ்விரண்டின் முக்கிய கவனத்தைப் பெறுகின்றன. இப் பள்ளியின் பொறுப்பு வாய்ந்த அலுவல்களை ஆராய்ந்து தகக தீர்மானங்கள் செய்வதில் பல முறை கூடி உதவி புரிந்து வந்திருககின்றனை. சென்ற கோடை விடுமுறையில் ஆசிரியர்கள் எல்லோரும் நந்தி மலைகளுககு உல்லாசப் பிரயாணம் சென்று ஐந்து நாட்கள் தங்கி வந்தனர். ஒவ்வொரு ஆசிரியரும் ஏதாவது ஒரு முக்கிய பொறுப்

யைத் தாங்கி தங்களால் இயன்றவரை அதை நடத்தி வருவதன் மூலம் பள்ளி வாழ்க்கையிலும், அதன் முன்னேற்றத்திலும் அதிகமாக ஈடுபடுவது குறிப்பிடத் தக்க விஷயமாகும்.

இப்பள்ளியை ஓர் உயர்நிலைப் பள்ளியாக மாற்றியமைக்க இப் பள்ளியின் நிர்வாகக குழுவினர் ஆலோசனை செய்து கடந்த ஆண்டிலேயே கல்வி அதிகாரி அவர்களுக்கு நான்காம் படிவத்தை அமைககுமாறு மனு செய்திருந்தனர். போதிய மூலதனம் (Endowment) இல்லாத காரணத்தினால் இவ்வாண்டின் துவக்கத்தில் நான்காம் படிவம் ஏற்பட முடியாதுபோக நேர்ந்தது. மீண்டும் வருகிற ஆண்டு 1956—57-இல் நான்காம் படிவம் துவக்க உத்தரவு அளிக்குமாறு கல்வி அதிகாரிகளுககு நிர்வாகச் சங்கத்தின் சார்பில் மனு செய்யப்பட்டுள்ளது. மிகப் பழைய இப்பள்ளியானது அநேக பத்தாண்டுகளாக இவ் வட்டாரத்தில் மாணவ மாணவிகளுக்கு அறிவூட்டும் சிறந்ததோர் ஸ்தாபனமாகப் பணியாற்றி வந்திருக்கின்றது. அநேக ஆண்டுகள் இது நடுத்தரப் பள்ளியாகவும் இருந்து வந்திருக்கின்றது. உயர்நிலைப் பள்ளியாக மாற்றுவதிற்கான வசதிகள் எல்லாம் செய்யப்பட்டு வருகின்றன. ஆதலால் வருகிற ஆண்டின் துவக்கத்தில் நான்காம் படிவத்தை ஆரம்பிப்பதற்குக் கல்வியதிகாரிகள் உயர் நிலைப் பள்ளி வசதியில்லாத இவ் வட்டாரத்தில் இவ் வசதியை உண்டு பண்ண உத்தரவு கொடுத்து ஆதரிப்பார்கள் என நம்புகின்றோம்.

இப்பள்ளி உயர் நிலைப் பள்ளியாக மாறவேண்டும் என்ற நோக்கத்தில் விசேஷமான கவனத்தையும் அநுதாபத்தையும் காட்டி வரும் மெத்தடிஸ்ட் மிஷனரி சொஸைட்டி தென்னிந்திய ஐக்கிய திருசசபையைச் சேர்ந்த சென்னை டயோஸிஸ், அதைச் சேர்ந்த கல்வி நிர்வாக சபைகளுககும் எங்களுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம். இப்பள்ளியை நிர்வகிக்கும் அநேக அலுவல்களில் சிறந்த ஆலோசனைகளை கொடுத்துதவும் நிர்வாகக கமிட்டி அங்கத்தினர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

முடிவாக இவ்வாண்டில் நடைபெற்ற ஒவ்வொரு அம்சங்களில் பங்கு பெற்று, சிறப்பான ஊக்கத்தையும் உண்மையான உழைப்பையும் காட்டி, மாணவர்களைக் கல்வியில் மட்டுமல்ல ஒழுககத்திலும், நன்னெறியிலும் செலுத்த, என்னோடு ஒத்துழைத்த என் உடன் ஆசிரியர்களுக்கும், அன்பான மாணவர்களுக்கும், எங்களுடைய அழைப்பிற் கிணங்கி கூடிவந்துள்ள பழைய மாணவர்கட்கும் நல்ல பெற்றோர்களுக்கும போஷகர்களுககும் என் நன்றியைத் தெரிவித்துககொள்கிறேன்

M. M. Secondary School
Alandur

A. Paul William,
Headmaster.

Our School History

Ninety two years had rolled on into the space of time and we recall with pride and gratitude the services of eminent men like the Rev. Griffiths, the Rev. Richard Brown and the Rev. William Goudie who toiled against odds to lay the foundation of this Institution.

Started as a primary school in 1864, consisting of lower classes, it gradually grew in strength. Under the patronage of the Rev. Richard Brown, the Head teachers and their assistants worked to improve the school, and it was soon made into a middle school. The flame of enthusiasm did not stop here. It spread and grew, with the result that in 1884, it became a High School with only upto Pre-Matriculation class and in 1885, Matriculation class was opened Unhappily it did not remain long as a High School. In 1886, it attained its original status, namely, a middle secondary school and still continues to be so.

Very soon for want of accommodation some houses adjoining the school on the southern side were bought and demolished for providing space for the playground. Even today we see in our Volley Ball court brickworks that speak of the history of these buldings.

In the year 1921, the old school buildings were demolished, and the present buildings were constructed. Our School also had branch and feeder schools for boys and girls in the same locality. In the year 1928, recognising the need for expansion, another extension to the main building on its left, constituting a wing was planned at and constructed by the Rev. T. R. Foulger, M.A., now the principal of the Meston Training College, Royapettah, Madras, who was then the Manager of our school. Subsequently, additional-sheds had to be erected in order to accomodate more classes.

In this long and continuous chain of our school history, the Rev. Griffiths, the Rev. Richard Brown, the Rev. William Goudie, the Rev. J. E. Neil, the Rev. Mervyn Blow, the Rev. J. P. Shrimpton, the Rev. A. O. Brown, the Rev. G. W. Bowker, the Rev. C. H. Monahan, the Rev. G. P. Gibbens the Rev. S. S. Luckcock, the Rev. B. Clutterbuck, the Rev. Paul Ramaseshan, Mr. Balraj, Mr. Victor, the Rev. A. G. Payne andthe Rev. H. E. C. Pettet, have acted as links in managing the affairs of the school with distinction and sacrifice.

The services of Sri. Kesava Mudaliar, Sri. A. Ramiyangar, Sri. S. Jeseph, B.A., and Sri. Balraj, M. Victor, B.A., L.T., as Headmasters are worthy of praise and remembrance with gratitude.

Those of us belonging to the present, pupils and teachers, owe our gratitude and respect to those great men of the past and we pray God will use us more and for His Service and Glory, in the days to come.

7 MAY 1958 MADRAS

RECEPTION TO EMINENT VISITORS



Mr. Jessie Owens introduced by the Headmaster.



Mr. Jessie Owens poses with Staff & Pupils

Our Pupils cheering the Russian Priminister, Mr. Bulganin

A few of our Pupils with garlands to welcome him.

3 MAY 1956

Scouts & Guides 'Guard of Honour' to our D. E. O.

Republic Day–Flag Salutation.
Major Xaviour Celestine-our guest

WELCOME & GUARD OF HONOUR



Christian Masters Retreat at Goodlet High School, Sholinghur.



Welcome to Sri J. A. Ryan M.A., B.T.,
(Our D. E. O.)

STAFF COUNCIL 1955—1956

The following are the members of the Staff Council for the year 1955-56.

Sri. A. Paul William B.A., L.T., M.Ed., (President)
Sri. Edward Stephen (Secretary)
,, O. Padmanabha Naidu
,, J. Thangaraj
,, Joseph Muthu
,, Christian Joseph (Art Master)
,, Kalyanasundaram (Physical Instructor)
,, B. Kuppuswamy (Weaving Instructor)
Srimathi S. V. Balraj

This year the Staff Council is expanded by three more members to give their suggestions and plans to improve the physical activities and Arts and Crafts training. The Council during the course of the current year has done its useful work through discussions touching the various aspects of discipline, progress in studies, and curricular and extra curricular activities. Matters relating to late coming and negligence of home work received careful attention at the meetings. Pupils thrift scheme and tutorial supervision of pupils, welcoming the Russian Premier, and garlanding Mr. Jessie Owens the famous athlete on his way to Bombay, formed important topics for discussion. The council permits every member to express and discuss views and ideas on educational projects and teaching methods. Thus we had a very successful year and hope to have many more in time to come.

G. Edward Stephen,
Secretary.

Masters' Association

In the wake of a new school year, it is usual to see every organ of the institution becoming busy with its activities. One of the important organs of the school is the Masters' Association which consists of both men and the lady teachers of our school.

Its main object is to assist in the organisation of the school on sound lines and to develop the spirit of harmonious pulling together. It began its activities with its first business meeting when the members of the various committees were elected

The Headmaster being the Ex-Officio President of the Association called on the members to put forth their earnest and sincere efforts to raise the level of efficiency of the school. The members of the Association in response to that call volunteered to do their atmost in this direction.

This spirit of happy comradeship of the members was evidenced on the occasion of the visit of the King and Queen of Nepal, that of the Russian Leaders to Madras, and the visit of the world famous Athlete Mr. Jessie Owens when they passed through the main road near our school.

At the various meetings of the Association, the Headmaster laid great stress on

the necessity of adequate preparations for the teaching of every lesson.

Under the auspices of the Association Excursions were arranged for the pupils to places in and around Madras. The staff had been to Bangalore and Nandi-hills during the summer holidays. About 123 pupils and staff went on a two day excursion to Thirukkalikunram and Maha-balipuram.

At the time of our Annual Inspection a meeting of this Association was held when the District Educational Officer presided. He gave valuable suggestions to the teachers regarding the methods of teaching.

An association of this kind is a vital necessity for building up the tone of the school

Our thanks are due to the Headmaster for his wise guidance, kind and sympathetic help to us in all our activities during the school year.

S. V. Balraj
Secretary.

THE ENGLISH LITERARY ASSOCIATION, 1955—56.

The following office bearers were elected for the year 1955—56

Sri A. Paul William B.A., L.T., M. Ed.,	President
O. Padmanabha Naidu	Master Secretary
S. Vijayaraghavan Henritta	Secretaries
A. E. Thulasi Rao	Asst. Secretary
M. Pandian Abdul Rahoof Gurumurthi Arul Mary	Class Representatives

Our Association was inaugurated on the 29th July 1955, under the presidentship of Sri. A. Paul William B.A., L.T., M.Ed., when Miss Henderson, Headmistress, the Advent Mission Girls' School Guindy, delivered the address. She spoke on the importance of the English Language and the ways of improving it in thought and speech.

During the year under review five meetings were held.

Details of the meetings are as follows :—

Date	Topic	Chairman	No. of pupils who spoke
10—8—55	Good Manners	Mr. O. P. Naidu	20
26—10-55	Friendship	,, J. Thangaraj	30
7—12-55	Newspaper reading	,, Edward Stephen	30
20—1—56	City life and country life	,, G. V. Pauliah	30
30—1—56	Library and its uses	,, T. G. Devanesan	51

The valedictory meeting was held on Monday the 27th February 1956 in the school hall under the chairmanship of our President. Sri S. Vaitheeswaran B.A., L.T., Assistant, Corporation High School, Saidapet delivered the valedictory address. He spoke on the value of English Literature. It was very illuminating and inspiring. We thank him for his valuable address.

The following are the results of the Annual Contests :—

Recitation contest

Boys.			Girls.		
1.	S. Vijayaraghavan	III F. A.	1.	Henritta	III F. B.
2.	P. T. Rajagopal	III F. C.	2.	Regina	III F. B.

Oratorical contest

1.	S. Vijayaraghavan	III F. A.	1.	Regina	III F. B
2.	Vincent James	III F. C.	2.	S. Susai Mary	III F. B.

Our thanks are due to our Headmaster and the other members of the staff for their interest, delight, and enthusiasm shown towards the progress and usefulness of our Association and for their good counsels and suggestions at our meetings.

O. Padmanabha Naidu,
Secretary.

ஒலிபரப்பும், திரைப்பட நிரூபண விளக்கம்

(Audio-Visual Education)

மேற்கூறிய வேலை இவ்வருஷ துவக்கத்தில் வழக்கம்போல் ஆரம்பித்தன. பள்ளியிலுள்ள வானொலி மூலமாக கல்வி சம்பந்தமான பாடங்களையும், பாட்டுக்களையும், சொற்பொழிவுகளையும், அறிவை வளர்க்கும் செய்திகளையும் கேட்பதற்கு பள்ளியில் மாணவர்களுக்கு சந்தர்ப்பங்கள் அளிக்கப்படுகின்றன.

விஞ்ஞானம், சரித்திரம், பூகோளம், சமூக நூல் முதலிய பொது அறிவை வளர்க்கும் பாடங்களை அறிவிக்க பின்குறிப்பிட்ட படங்கள் மாணவி மாணவர்கட்கு இவ்வருஷத்தில் திரையில் காட்டப்பட்டன.

படங்களின் பெயர்

1. சூரிய ஒளி சக்தி.
2. வில்லைகள்
3. பூனை இனம்
4. சுவாசித்தல்
5. இரத்த ஓட்டம்
6. ஜீரண சக்தி
7. மறைந்த மண்டலம்
8. தாரைக்காரன்
9. மெக் ஆர்தரும் மணிலா வீழ்ச்சியும்
10. சென்னையில் காந்தி
11. உடல் நிலை
12. சாதாரண முதற் சிகிச்சை
13. விளையாட்டு பூச்சிகள்
14. நாயின் அறிவு
15. கிழக்கு இந்திய தீவுகள்
16. ஆட்டி to டிரினிடாட்
17. துறைமுகக் காட்சி
18. கடல் வாழ்க்கை
19. ஹாங்காங்
20. நீந்துதல்

இப்படக் காட்சி பள்ளி மாணவர்களுக்கு உற்சாகத்தையும் சந்தோஷத்தையும் அளிக்கின்றன.

எம் பள்ளி மாணவர்களில் சிலர் அகில இந்திய ஒலிபரப்பு நிலையத்தில் இதர ஆரம்ப பள்ளிக்கூடங்களுக்குச் சில விளையாட்டுகளைச் செயல் முறையில் காட்டினர். இவ்விதமான செயல் முறை ஆட்டங்களுக்குப் பயிற்சி கொடுத்த உடல் பயிற்சி ஆசிரியருக்கும் மற்ற ஆசிரியர்களுக்கும் எங்கள் நன்றி உரித்தாகுக.

S. JOSEPH MUTHU,
Secretary.
Audio-Visual Education.

Girl Guides and Blue Birds

இவ்வருடமும் எவ்வருடம்போல் சாரணச் சிறுமிகளும் நீலப் பறவைகளும் தங்கள் ஒழுக்கத்தின் உயர் சின்னங்களாம் நற்குணங்களுடன் தங்கள் வேலைகளை புதிய சிறுமிகளுடனும் புதுப் பறவைகளுடனும் தங்கள் வாக்குறுதிகளுடன் தங்கள் உழைப்பின் நன்னாளை ஒரு பொன்னாளில் துடங்கினார்கள்.

எங்களுடைய இரண்டாவது கூட்டத்தில் பெரம்பூரிலிருந்து வந்த ஒரு சாரணப்படை எங்களுடன் சேர்ந்து உற்சாகத்துடன் பங்கு பெற்றார்கள்.

பிறர்க்குதவி செய்தலும் எந்நேர ஆயத்தமும் எங்கள் எல்லோருடைய வாழ்வின் முன்னணியாகக் கொண்டு நாங்கள் எங்கள் கூட்டங்களைச் சந்தோஷத்துடன் பாட்டுகளைப் பாடி நடத்திவந்தோம்.

அக்டோபர் மாதக் கடைசியில் கிராமபேட்டையில் நடந்த Joint Camp-க்கு எங்கள் குழுவிலிருந்து 28 வழிகாட்டிப் பெண்கள் சென்று இரண்டு நாட்கள் தங்கி, நல்ல பயிற்சிபெற்று, மற்ற பள்ளியின் சாரணச் சிறுமிகளுடன் கலந்து உற்சாகத்துடன் எல்லா வைபவங்களிலும் கலந்து பழகி, புதிய சாரணச் சிறுமிகளாகத் திரும்பினர்.

மேலும் ஜனவரி மாதத்தில் எங்கள் சாரணச் சிறுமிகளில் அநேகர் அயல் நாட்டிலிருந்து வந்த (Assistant Secretary for Scouts and Guides) உதவி செயலாளரை வரவேற்க விமானக்கூடம் சென்று எங்கள் குழுவின் சகோதரிகளான சென்னையிலிருந்தும், தாம்பரத்திலுமிருந்து வந்திருந்த மற்றவர்களுடனும் கலந்துகொண்டோம். அவர் திரும்பிப் போகும்போதும் எல்லோருமாகச் சென்று விமானக்கூடத்தில் அவரைச் சந்தோஷமாக வழியனுப்பினோம். இது எங்களுக்குக் கிடைத்த ஒரு பெரிய சிலாக்கியமே.

பள்ளியின் விசேஷ தினங்களிலும், பள்ளியைப் பார்வையிடும் பெரியார்களை வரவேற்பதிலும் சாரணச் சிறுமிகளும், நீலப் பறவைகளும், உற்சாகத்துடன் அணிவகுத்து நின்று மரியாதை செய்வதில் தவறுவதில்லை.

ஆண்டின் ஆரம்பத்தில் எங்களுக்குக் காட்டிய உற்சாகத்தினின்றும் கொஞ்சமும் குறையாமல் அதிகரித்த ஆவலுடன் எங்களுடன் எங்கள் உழைப்பில் பங்குபெற்று கடமையினின்றும் தவறாதவண்ணம் அறிவும் ஆற்றலும் மலிந்த அறிவுரைகளினால் எங்களை அமைத்து உருவாக்கிய எங்கள் தலைமை ஆசிரியருக்கு எங்கள் உள்ளம் கனிந்த நன்றி என்றும் உரித்தாகுக.

S. V. Balraj,
Soranam Victor.
Guiders.

குடிமைப் பயிற்சி

இவ்வாண்டு அலுவல்கள்

7—7—55 அணிகள் பிரித்தல், அணித்தலைவர்கள் தேர்ந்தெடுத்தல்.

13—7—55 பள்ளி மாணவத்தலைவன் தேர்ந்தெடுத்தல். K. குருமூர்த்தி மாணவனாகத் தேர்ந்தெடுக்கப்பட்டான்

கொடிவணக்கம்	கொடியேற்றியவர்
சுதந்தர தினம்	திரு. கருணாகரன் B. A. B. L
உலக சுகாதார தினம்	ஜில்லா சுகாதார அதிகாரி.
குடியரசு தினம்	திரு. சேவியர் செலஸ்டீன்.
பள்ளி ஆண்டு விளையாட்டு தினம்	திரு. மேனன் B Sc., B.L., (Executive Officer, St. Thomas' Mount)

பள்ளி பாராளும் மன்றம்

கவர்னர்	—	உயர்திரு. பால்வில்லியம் B. A. L. T.
ஆலோசகர்	—	திரு. விக்டர் பாக்கியநாதன்.
சபாநாயகர்	—	A. E. துளசிராவ் III F. A.
உதவி சபாநாயகர்	—	G. விஜய லட்சுமி III F. A.
பிரதம மந்திரி	—	K. குருமூர்த்தி III F. C.
கல்வி மந்திரி	—	S. விஜயராகவன் III F. A.
களியாட்டு மந்திரி	—	அஹமத் பாஷா III F. A.
உல்லாசப் பிரயாண மந்திரி	—	ஹரூன் II F. A.
சுகாதார மந்திரி	—	C. ஹகீம் II F. C.
சட்டதிட்ட மந்திரி	—	கார்மேல்ராஜ் III F. C.
உணவு மந்திரி	—	ரகூப் III F. B

இப்பள்ளியின் பாராளும் மன்றம் சுத்தம் ஒழுக்கம் முதலியவைகளைக் கவனித்து பள்ளிக்குத் தன்னாலியன்ற சேவையைச் செய்து வருகின்றது.

வெளியே சென்ற இடங்கள்

III Form	—	வேளச்சேரி ஏரி, பரங்கிமலை.
II Form	—	பரங்கிமலை.
I Form	—	பரங்கிமலை.

குடிமைப்பயிற்சி சம்பந்தமான ஓர் போட்டி எல்லா வகுப்புக்களுக்கிடையே நடைபெற்றது. தலைமை ஆசிரியரைத் தலைவராகக் கொண்ட ஒரு சிறு கூட்டம் எல்லா வகுப்புக்களையும் பார்வையிட்டு மார்க்குகள் வழங்கினர். இதனில் III Form. C, V Class A முதல் அங்கம் பெற்றது. இவ்வகுப்புக்களுக்கு காஞ்சிபுரம் ஆண்டர்சன் உயர்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர் எங்கள் பள்ளியைப் பார்வையிட்டபோது கௌரவச் சின்னங்களை வழங்கினார்.

எங்கள் பள்ளியில் இவ்வளவு சிறப்பாக நடப்பதற்கு ஊக்கத்தை ஊட்டி வரும் எமது தலைமையாசிரியருக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். இன்னும் எல்லா வைபவங்களும் இனிது முடிய உதவி செய்த எல்லா ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

Victor Backianathan,
Master-in-charge of Citizenship Activities.

சித்திரக் கலையும் தொழிற் கலையும்

முற்காலத்தில் ஜனங்கள் பாஷைகளை அறியு முன் சித்திரங்களைக் கொண்டுதான் தங்களுக்குத் தேவையானவைகளை வாங்கியும், கொடுத்தும் வந்தார்கள். அதாவது:-ஒருவனுக்கு ஏதாவது ஒரு பொருள் வேண்டுமாயின் அவன் அப்பொருளைப்போல உருவம் வரைந்து காண்பித்து வாங்குவது வழக்கமாம். ஆகையால் சித்திரக்கலை எல்லாக்கலைகளிலும் சிறந்ததாகும். யார் சித்திரம் நன்றாய் வரைகிறார்களோ அவர்களுக்குக் கையெழுத்தும் நன்றாயிருக்கும். நாம் எந்த வேலையை எடுத்துக்கொண்டாலும் முதலில் சித்திரம்தான் வேண்டியதாயிருக்கிறது. அதை நாம் பெறுவதெப்படி? நமக்குச் சித்திரம் வரைய ஒருக்காலும் முடியாது என்று ஒருவரும் சொல்லிவிடக்கூடாது. சித்திரம் பழகப் பழகத்தானாகவே வரும். "சித்திரமும் கைப்பழக்கம் செந்தமிழும் நாப்பழக்கம்" என்பதுபோல் நாம் சித்திரக் கலையை விடா முயற்சியோடு பழகிவந்தால் அதில் நாம் தேர்ச்சியடையலாம் என்பதில் யாதொரு ஐயமுமில்லை. இரண்டாவதாக தொழிற்கலை. தொழிற்கலையை நாம் படிப்போடு சேர்த்துப் பழகிவந்தால் அதனால் நமக்குப் பிரத்தியேக வருமானம் கிடைக்கும். அதனால் தான் நம் அரசாங்கத்தார் ஒவ்வொரு பள்ளியிலும் தொழிற் கலையை மாணவ மாணவிகளுக்குக் கற்றுக்கொடுக்க ஏற்பாடு செய்திருக்கிறார்கள். மாணவ மாணவிகள் இக்கலைகளில் தங்கள் ஊக்கத்தைச் செலுத்தி பயின்று வருவார்களாயின் அதனால் அவர்கள் தங்கள் பிற்காலத்தில் தக்க பலனை அடைவார்கள் என்பதில் சந்தேகமில்லை.

M. Joseph Christian,
சித்திரக் கலை ஆசிரியர்.

விஞ்ஞானக் கழகம் 1955—56

இக்கழகம் இவ்வருடம் ஆகஸ்டு மாதத்தில் துவக்கப்பட்டு நடந்து வருகிறது. இக்கழகத்தில் சுமார் இருபது பேர்கள் அங்கத்தினர்களாகச் சேர்ந்தார்கள். முதல் கூட்டத்தில் செயலாளர் இக்கழகத்தின் நோக்கத்தைப் பற்றியும், இது உலகத்தில் பெற்றுள்ள இடத்தைப்பற்றியும் மாணவர்கள் இக்கழகத்தில் எவ்வாறு பங்கு எடுத்துக் கொள்ளலாம் என்பதைப் பற்றியும் தெரிவித்தார். இக்கழகத்தின் சார்பாக மகம்மது ஹாரூன் என்ற இரண்டாம் படிவ மாணவனை, மாணவச் செயலாளனாகத் தேர்ந்தெடுத்தனர்.

இக்கழகத்தின் துவக்கக் கூட்டம் திரு. மோசஸ் எபிநேசர் அவர்கள் நடத்தி வைத்தார். அவர் மாணவர்கள் எவ்வாறு விஞ்ஞானத் துறையில் முன்னேறலாம் என்பதைப்பற்றித் தெளிவாக எடுத்துரைத்தார்.

இக்கழகத்தின் அங்கத்தினர்கள் உற்சாகமாக பள்ளிப்பொருட்காட்சி சாலைக்குத் தேவையான பொருள்களைச் சேகரித்துக் கொடுத்தனர்.

இப்பள்ளி உயர்நிலைப்பள்ளியாக மாறும்போது இக்கழகமும் உயர்நிலையை அடையுமென்று மனப்பூர்வமாக நம்புகிறோம்.

Md. Haroon,
Pupil-Secretary

Edward stephen,
Teacher-Secretary.

நுண்கலைக் கழகம்

(Fine Arts Society)

தலைவர்:-உயர்திரு. A. பால்வில்லியம் அவர்கள் B. A., L. T., M. Ed.

செயலாளர்:—திரு. விக்டர் பாக்கியநாதன்.

இக்கழகம் கடந்த இரண்டு ஆண்டுகளாக எம் பள்ளியில் நடத்தப்பட்டு அரியதோர் சேவையைச் செய்து வருகிறது. பராமுகமாய் இருந்தால் மறைந்து வளம் பெருது வதங்கி விழுந்து போகக்கூடிய, இசை, நடிப்பு, போன்ற கலைகளை வளர்ப்பதையே பெருநோக்கமாகக்கொண்டு இக்கழகம் நடத்தப்பட்டு வருகிறது. இதன் மூலம மாணவர், மேடைமீதேறி ஐயந்திரிபற பேசவும், நடிக்கவும், தெரிந்து கொள்ளுகின்றனர். பள்ளியில் நடைபெறும் விழாக்களிலே நாட்டிய நிகழ்ச்சிகளையும், சிறு நாடகங்களையும் நடத்த இக் கழகம் மிகவும உதவியாக இருக்கிறது.

நாட்டியங்கள் திருமதி பால்ராஜ் விக்டர் அம்மையாரால் சிறந்த முறையில் கற்பிக்கப் படுகின்றன. அவர்களது பேருழைப்பை இக் கழகம் பெரிதும் பாராட்டுகிறது

இவ்வாண்டு இக்கழகம் ஆற்றிய பணிகள்.

1. ஐக்கிய நாட்டு ஸ்தாபன தினத்தன்று இக்கழக உறுப்பினர் நாட்டியத்தில் பங்கு பெற்றனர். பலர் நடிப்பில் கலந்து கொண்டனர்.

2. காஞ்சிபுரம் கிறிஸ்தவ உயர்நிலைப்பள்ளியின் தலைமை ஆசிரியர் எம் பள்ளியைப் பார்வையிட்டபோது பல நாட்டியங்களைக் கொண்டு அவரை மகிழ்விக்கச் செய்தது.

3. சாரணர் விழாவிலே சாரணப் படையில் ஈடுபட்டுள்ள எமது உறுப்பினர் நடிப்பிலும நாட்டியத்திலும் கலந்து கொண்டனர்.

4. கிறிஸ்து ஜயந்தியின் கொண்டாட்டத்தில் ஒரு நாடகம நடத்தபபட்டது.

இக்கழகம நன்முறையில் பணியாற்றுவதற்குக் காரணம் கலையார்வங்கொண்ட எமது தலைமையாசிரியரே என்று சொன்னால் அது மிகையாகாது. அவரது சீரிய ஆதரவின் கீழ் இது செவ்வனே சிறப்புற்று நடந்தது வருகிறது. இத்தகைய கலையுணர்ச்சியும், சிறப்பும கொண்டு எம் நுண்கலைக் கழகத்தின் தலைவராக விளங்கும் எமது தலைமை ஆசிரியருக்கு இக்கழகத்தின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்

விக்டர் பாக்கியநாதன்
செயலாளர்.

1955-56 ஆண்டின் உடற்பயிற்சி அறிக்கை

இப்பள்ளியிலுள்ள மாணவ மாணவிகளுக்கு நல்லதோர் உடற் பயிற்சியை அளிக்கவும் அவர்கள் கற்ற விளையாட்டுகளைத் தங்களுக்குள்ளேயே போட்டியிட்டு தங்கள் திறத்தை அறியவும் வழக்கம்போல் மாணவர்கள் நான்கு குடும்பங்களாகவும பெண்கள் இரண்டு குடும்பங்களாகவும பிரிக்கப்பட்டுள்ளனர். பிள்ளைகளுக்கும வேண்டிய பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. இதற்கு முன்பு குடும்பங்களின் பெயர்கள் நிறங்களின் பெயர்களால் அழைக்கப் பட்டு வந்தன. இவ்வாண்டு அப்பெயர்கள் இப்பள்ளியில் அநேக ஆண்டுகளுக்கு முன் நிர்வாகிகளாக ஊழியம செய்த சங்கை கௌடி, சங்கை மோனஹன், சங்கை பிரவுன் சங்கை கிரிபித்ஸ் இவர்களின் பெயர்களால் மாற்றி அமைக்கப்பட்டிருக்கின்றன. இவ்வித மாறுதலை ஆசிரியர்களும் மாணவர்களும அதிக உற்சாகத்தோடு வரவேற்று குடும்ப விளை

பாட்டுப் போட்டிகளில் சிறப்பாக பங்கெடுத்துக் கொண்டு இருக்கின்றனர். உடற் பயிற்சி சம்பந்தமான எல்லா அலுவல்களும் (Games Committee) உடற்பயிற்சி அலுவற்குழு மூலம் ஒழுங்கு செய்யப்படுகிறது.

இப்பள்ளியின் வருடாந்திர ஓட்டப் பந்தயம் (Annual sports) பிப்ருவரி மாதம் 11 ஆம் தேதி வெகு விமரிசையாக ராணுவமைதானத்தில் நடத்தப்பட்டது. அவ்வமயம திரு. மத்தூர் M. A. அவர்கள் தலைமைத்தாங்கி இப்பள்ளியின் ஒழுக்கத்தையும விளையாட்டின் சிறப்பையும் பற்றிப புகழ்ந்து பேசினார் திருமதி மாத்தூர் அம்மையார் வெற்றி பெற்ற மாணவ மாணவிகளுக்குப் பரிசுகள் வழங்கினார்கள்.

இப்பள்ளியானது செங்கற்பட்டு ஜில்லாவின் விளையாட்டுப் போட்டிகளிலும் பங்கெடுத்துக் கொண்டது. பேட்மென்டன் விளையாட்டில் தொடர்ச்சியாக மூன்றாவது வருஷம் வெற்றி பெற்றார்கள். K. குருமூர்த்தி என்ற மாணவன் இப்போட்டிகளில் கலந்து High Jump-இல் முதலாவதிடம் பெற்று வெற்றி பெற்றான்.

எங்கள் பள்ளிக்கு கூடிய சீக்கிரம் விளையாட்டு இடம் கிடைக்குமென்று நம்புகிறோம். இவ்வருடம் எங்களுக்கு உதவி செய்த எல்லா ஆசிரியாகளுக்கும் மாணவர்களுக்கும் எங்கள் நன்றி. முக்கியமாக தகுந்த நேரத்தில் நல்வழி காட்டி ஊக்கத்தோடு இடைவிடாது உழைத்த எம் பள்ளித் தலைமை ஆசிரியருக்கு என் நன்றி

பந்தய ஓட்டங்களிலும் விளையாட்டுப் போட்டிகளிலும் வெற்றி பெற்றவர்களின் குறிப்புக்கள் பின் வருமாறு :—

School Annual Sports

Boys:—Intermediates Champion	K. Gurumurthy,	III Form C.
Junior Champion	A. Jayaraman,	III Form B.
Girls:—Senior Champion	I. Rosy Bai,	III Form A.
Junior Champion	S. Santha Mary,	I Form A.
Athletic House Championship	Griffiths House.	

Inter House tournament in games.

Boys.—

Name of Games	Griffiths	Brown	Goudie	Monahan	House Championship
1. Tennikoit	10	Nil	15	5	Goudie
2. Badminton	15	5	10	Nil	Griffiths
3. Volleyball	Nil	15	10	5	Brown
4. Kho-kho	15	7	7	Nil	Griffiths
5. Football	7	7	2	12	Monahan
6. Hockey	Nil	12	5	12	Brown & Monahan
Total	47	46	49	34	Goudie House

				Champions
Girls :—Throw Ball	1.	Seniors	—	Sun Flower House
	2.	Juniors	—	Lotus House
Tennikoit	1.	Seniors	—	Sun Flower House
	2.	Juniors	—	Lotus House

House masters

Griffiths	Mr. J. Thangaraj
Goudie	,, G. V. Pauliah
Brown	,, Edward Stephen
Monahan	,, O. Padmanabha Naidu

Mr. Moses Ebenezer,
Sports Secretary.

N. I. S. Kalyanasundaram.
Physical Education Teacher.

குருளையர் மந்தை ஆண்டறிக்கை.

இவ்வருடத் துவக்கத்திலே 36 குருளையாகள் கொண்ட மந்தை அமைக்கபபட்டது. அவர்கள ஆறு அறுவர்களாக பிரித்து ஒவ்வொரு குழுவுக்கும் ஒரு பெயர் சூட்டப்பட்டது நடைமுறை.- சனிக்கிழமை காலை எட்டு மணிக்கு இமமந்தை பள்ளி வட்டாரத்தில் கூடும். அபபோது இபககத்தின் சட்டம, வாக்குறுதி, வீரக்கதைகள், தியாகிகளின் சரிதைகள், பக்தி உபந்யாசங்கள் போதிப்பதோடு நாடோடி பாடல்கள், தேசிய கீதங்கள், வனக்கூத்துகள், உடற் பயிற்சிகள், புலப்பயிறசி அளிக்கும விளையாட்டுகளும போதிக்கப பட்டன.

இவ்வாண்டில் குருளையர்கள் கலந்துக் கொண்ட விசேஷ நிகழ்ச்சிகள்.

1. கார்லி உயர்நிலைப்பள்ளி சாரணரோடு சேர்ந்து குரோமபேட்டையில் இரண்டு நாட்கள் பாடிவாழ்க்கை.

2. திருவாமூரில் சமூக வேலை.

3. உலக ஓட்டப்புகழ் பெற்ற ஜெஸி ஓவென்ஸ் அவர்கட்கு கௌரவ வரவேற்பு.

4. நேப்பால் நாட்டு அரசருக்கு கௌரவ வரவேற்பு.

5. ரஷிய நாட்டு தலைவர்களுக்கு கௌரவ வரவேற்பு. இன்னும பல சந்தர்பபங்களில் சாரணர்களுடன் சேர்ந்து பல நிகழ்ச்சிகளில் கலந்துக் கொண்டனர்.

இவ்வாண்டில மநதை ஒழுங்காக ஒவ்வொரு வாரமும கூடமுடியாமற்போனாலும மந்தை கூடின சமயங்களிலும அவர்கள் கலந்துக் கொண்ட நிகழ்ச்சிகளிலும மாணவர்கள் பல நற்பயிற்சிகள் பெற்றார்கள் என்பதில் ஐயமில்லை.

இமமந்தை நல்லமுறையில் நடந்தேற வழி காட்டிய பளளிசாரணப்படை பொதுத்தலைவராகிய தலைமை ஆசிரியருக்கு எஙகள நன்றி உரித்தாகுக. இதில ஊக்கங்கொண்ட பெற்றோர்களுக்கும் எங்கள் நன்றிகலந்த வணக்கம.

T. G. Devanesan,
(A. C. M.)

S. Moses Ebenezer.
(C M)

மாணவர் தமிழிலக்கியக் கழகம் 1955–56

இக்கழகம் மாணவர்களின் சொல் வன்மையைப் பெருக்குவதற்கு வாய்ப்பளிக்கும் பயிற்சிக்கூடமாகும். மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப இக்கழகம் இரண்டாம் மூன்றாம் படிவ மாணவர்களுக்கு மாணவர் தமிழிலக்கியக் கழகம் என்றும் கீழ்வகுப்பு மாணவர்களுக்கு இளைஞர் தமிழிலக்கியக் கழகம் என்றும் இரண்டாகப் பிரிக்கப்பெற்று இயங்கி வருகின்றது. மாணவர்கள் தங்கள் கருத்துக்களை எடுத்துக் கூறவும், அவையிலே அச்சமின்றித் தாய் மொழியாம் தமிழ் மொழியில் தெளிவாகவும் திருத்தமாகவும் பேசவும், பயிற்றுவித்தது என்று மகிழ்ச்சியோடு கூறுகின்றோம்.

கழகப் பொறுப்பாளர்கள்

தலைவர்: உயர்திரு. A. பால் வில்லியம் அவர்கள் B. A., L. T., M. Ed.

செயலாளர்: திரு. M. பழநிமுத்து (தமிழாசிரியர்)

மாணவர் செயற்குழு

செயலாளன்: K. குருமூர்த்தி III F. E.

துணைச் செயலாளன்: பாலதண்டபாணி III F. E.

வகுப்புப் பிரதிநிதிகள்

	A.	B.	C.
III.	M பாண்டியன்	ஹென்ரீட்டா	நாகலிங்கம்
II.	மகமது ஹாரூன்	சரஸா பாய்	மகமது ஹக்கீம்

மேற்கூறிய கழகப் பொறுப்பாளர்கள் வருட ஆரம்பத்தில் ஜூலைத் திங்கள் 13-ஆம் நாள் நடந்த பொதுக் கூட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்டு இவ்வாண்டின் கூட்டங்களுக்குரிய ஒழுக்கங்களைத் தீர்மானித்தனர்.

கழகத் துவக்க விழா ஜூலைத் திங்கள் 22-ஆம் நாள் மாலை 3-30 மணிக்குப் பள்ளி மண்டபத்தில் தலைமையாசிரியர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அவ்வமயம் உயர்திரு. கங்காதரப் பாவலர் அவர்கள் 'இலக்கியம்' என்னும் பொருள்பற்றிச் சொற்பொழிவாற்றினார்கள்.

இவ்வாண்டு நடைபெற்ற கூட்டங்கள் பின்வருமாறு:—

எண்.	தேதி.	தலைவர்.	சொற்பொழிவாளர்	பொருள்.
1.	13—7—55	திரு. பழநிமுத்து	கழகநிர்வாகக்கூட்டம்	பிரதிநிதிகள்தேர்ந்தெடுத்தல்
2	22—7—55	திரு. பால்வில்லியம் அவர்கள் B.A., L.T., M. Ed.,	திரு. கங்காதரப்பாவலர்	இலக்கியம்.
3.	26—8—55	,, பத்மநாப நாயுடு	மாணவர்கள்	ஒழுக்கத்தின்மேன்மை
4.	3—11—55	,, ஜோஸப் முத்து.	மாணவர்கள்	நட்பு
5.	9—12—55	,, மோஸஸ் எபிநேசர்	மாணவர்கள்	கிராம வாழ்க்கையும் நகர வாழ்க்கையும்
6.	27—1—56	,, வித்துவான். மா. சுப்பிரமணியம்	மாணவர்கள்	விடுதலை வீரர்கள்
7.	21—2—56	திரு. பால்வில்லியம அவர்கள் B.A., L.T., M. Ed.,	திரு. S. V. வரதராச ஐயங்கார் அவர்கள் M. A., B. O. L.	பேச்சுக் கலை.

ஆண்டு விழாவின்போது மீனம்பாக்கம ஜெயின் கல்லூரி தமிழ் விரிவுரையாளர் திரு. S. V. வரதராச ஐயங்கார் அவர்கள் சொற்பொழிவாற்றினார்கள். அன்னாருக்கு எம் நன்றி. கூட்டத்தில் பேச்சுப்போட்டி, செய்யுட் போட்டிகள் நடந்தன. போட்டிகளின் முடிவுகளைத் தீர் மானித்த பள்ளித் தலைமையாசிரியர் அவர்கட்கும் இதர ஆசிரியர்கட்கும இக்கழகம நன்றி செலுத்துகிறது. கூட்டங்களில் தலைமை தாங்கிய அவர்கட்கும் சொற்பொழிவாற்றிய மாணவர் கட்கும் எங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொளகிறோம். சுடர் விட்டு எரியும் விளக்கிற்கும் தூண்டுகோல் இன்றியமையாததுபோல இக்கழகம் சிறந்த முறையில் நடைபெற அவ்வப்போது ஆலோசனைகளைக் கூறி பயிற்சி பெறாத எம்போன்றோர்க்குச் சிறந்த பயிற்சி பெறும்படியாக வாய்ப் பளித்த தலைமையாசிரியர் அவர்கட்கு எமது அன்பு கலந்த நன்றி.

இலக்கியக் கழகப் போட்டிகளின் முடிவுகள்

மூன்றும் படிவம். பேச்சுப்போட்டி.

முதற் பரிசு— சூசை மேரி III F. B.
இரண்டாம் பரிசு— பாலதண்டபாணி III F. C.

இரண்டாம் படிவம்

முதற் பரிசு— கோவிந்தராசன் II F. B.
இரண்டாம் பரிசு— ரெஜினு ,,

செய்யுட் போட்டி

மூன்றும்படிவம்

முதற் பரிசு— D. கோபால் III F. B.
இரண்டாம் பரிசு— R. விஜயலட்சுமி III F. A

இரண்டாம் படிவம்

முதற் பரிசு— ரெஜினு II F. B.
இரண்டாம் பரிசு— சூரியகுமார் II F. A.

K. குருமூர்த்தி,
மாணவச் செயலாளர்.

M. பழனிமுத்து,
செயலாளர்.

இளைஞர் தமிழிலக்கியக் கழகம், 1955-56

மாணவர்கள் ஐயமின்றிப் பேசவும, தங்கள் உள்ளக் கருத்துக்களைத் தங்கு தடையின்றி வெளியிடவும் இக்கழகம பயிற்சி அளிக்கிறது. இக்கழகம் கடந்த 5 ஆண்டுகளாக சிறந்த முறையில் நடைபெற்று வருகிறது. 5-ஆம் 6-ஆம வகுப்பு மாணவர்கள் இதன் உறுப்பினர்கள் ஆவர்.

பொறுப்பாளர்கள்

தலைவர் :— உயர்திரு. A. பால் வில்லியம் அவர்கள் B.A., L.T., M. Ed.,
செயலாளர் :— திரு. விக்டர் பாக்கியநாதன்.

செயற்குழு

செயலாளன் : பாலசுந்தரம் I F. C
பிரதிநிதிகள் : 1. ஜெயச்சந்திரன் I F. C.
2. கோகிலம்பாள் I. F. A.

3 சம்பத்குமார் V Class B.
4. போஜன் V Class A.

2-8-55 மாலை 3. 30 மணிக்கு இக்கழகத்தின் துவக்க விழா நடைபெற்றது. அவ்வமயம் திருவாளர் பத்மநாப நாயுடு அவர்கள் தலைமை வகித்தார். ஞானோதய போதனா முறை பாடசாலை ஆசிரியை திருமதி வேதநாயகம் அம்மையார் தமிழ் மொழி வளர்ச்சியைப்பற்றிப் பேசி இக் கழகத்தை ஆரம்பித்து வைத்தனர்.

இவ்வாண்டு நடைபெற்ற கூட்டங்கள்

தேதி	தலைவர்	பேசியவர்	பொருள்
13 7 55	திரு. விக்டர்		உறுப்பினர் தேர்ந்தெடுத்தல்
2 8 55	திரு. பத்மநாப நாயுடு	திருமதி வேதநாயகம்	தமிழ்மொழி வளர்ச்சி
1 11 55	திரு. மோசஸ்	13 மாணவர்	ஜீவகாருண்யம்
9 12 55	திரு. ரங்கநாதன்	7 மாணவர்	உண்மை நட்பு
27 1 56	திரு. தேவநேசன்	15 மாணவர்	மாணவர் கடமை
17 2 56	திரு. பாலையா	16 மாணவர்	கிராம வாழ்க்கை நகர வாழ்க்கை எது சிறந்தது?
5 3 56	திரு. பால் வில்லியம் B.A., L.T., M.Ed.,	தமிழ்ப்பித்தன்	நூல்நிலையமும் அதன் பயனும்

1956-ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 5-ஆம் தேதி 2-30 மணிக்கு இக்கழகத்தின் ஆண்டுவிழா நடைபெற்றது. அவ்வமயம் எமது தலைமை ஆசிரியர் உயர்திரு A. பால்வில்லியம் அவர்கள் தலைமை தாங்கினார்கள். திருவாளர். தமிழ்ப்பித்தன், தென்றல் துணையாசிரியர் அவர்கள் நூல்நிலையமும் அதன் பயனும் என்னும் பொருள்பற்றிச் சொற்பொழிவாற்றினர். அவ்வமயம் பேச்சுப் போட்டியும், பாட்டுப் போட்டியும் நடைபெற்றது.

போட்டியில் வெற்றி பெற்றவர்கள்

பேச்சுப் போட்டி :

முதற் படிவம்

ஜஹாங்கிர் I F. C. முதல் பரிசு
வனமேக்கர் I F. A. இரண்டாம் பரிசு

ஐந்தாம் வகுப்பு

ரகுராமன் V Class A முதல் பரிசு
இராஜேந்திரன் V Class B இரண்டாம் பரிசு

பாட்டுப் போட்டி :

முதற் படிவம்

பிரேமவதி I F. A. முதற் பரிசு
ஜஹாங்கிர் I F. C. இரண்டாம் பரிசு

கே. பாலசுந்தரம்,
மாணவ செயலாளர்.

ஐந்தாம் வகுப்பு

எலிசபத் V Class B முதற் பரிசு
சம்பத் குமார் V Class B இரண்டாம் பரிசு

இச்சங்கம் இவ்வாண்டு சிறப்பாக பணியாற்றியுள்ளது. இச் சங்கத்தில் உற்சாகத்துடன் பங்கு பெற்ற எல்லா அங்கத்தினர்களுக்கும் எம நன்றி உரித்தாகுக.

இச்சங்கத்திற்குத் தலைவராயிருந்து தக்க ஆலோசனைகளைத் தந்த எமது தலைமை ஆசிரியர் அவர்கட்கு எங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். கூட்டங்களில் தலைமை தாங்கி தங்கள் இனிய சொற்பொழிவுகளை ஆற்றித் தந்த எல்லா ஆசிரியர்களுக்கும் எங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

திரு. விக்டர் பாக்கியநாதன்,
ஆசிரியச் செயலாளர்.

நாட்டின் நாணயங்கள்

நாட்டின் நாணயங்கள் என்ற தலைப்பைக் கண்டதும் நாட்டின் பொருளாதார நிலையைப் பற்றி இக்கட்டுரை இருக்கலாம என்று வாசகர்கள் எண்ண இடம அளிக்கிறதென்ருலும இது பொருளாதாரத்தைக் குறித்ததல்ல.

நாணயம! ஆம, நாட்டில் நாணயமாக வாழ இதுதேவை. உலோக வட்டங்களுக்கு அல்லது காசுகளுக்கு ஏன் நாணயம் என்ற பெயர் ஏற்பட்டது? ஒருவேளை நாணயமாக வாழ வழி வகுப்பதால் இப்பெயர் ஏற்பட்டிருக்குமோ என்று கூட எண்ண வேண்டியிருக்கிறது. நாட்டின் முன்னேற்றத்திற்குவேண்டிய நாணயங்கள் நாணயமான மக்களே. அதிலும் வருங்கால பிரஜைகளான மாணவர்களே.

நாணயம் செலலுபடியாக வேண்டுமானல் அதில் இருப்புறங்களிலும் அரசாங்க முத்திரைகள் இருக்கவேண்டும். ஒருபுரம் முத்திரை இல்லாவிட்டாலும அல்லது தேய்வுற்ருலும அந்நாணயம செல்லுபடியாகாது. அது செல்லாத, உதவாத, மதிப்பில்லாத நாணயமாகக் கருதப் படுகிறது.

அதுபோலவே நாட்டின் நாணயங்களான மாணவர்களுக்குள் கல்வி அறிவும, ஒழுக்கமும் என்ற முத்திரைகள் பொறிக்கப்பட்டிருக்க வேண்டும. ஒருபுற முத்திரை, ஆசிரியர்களாலும மறுபுற முத்திரை, பெற்ருேர்களாலும ஏற்படவேண்டும. சுருங்கக் கூறின் மாணவரின் பூர்ணவளர்ச்சிக்குப் பெற்ருேரும ஆசிரியர்களும் சரிசமமான பொறுப்பு ஏற்கவேண்டும. இதில் ஒரு பொறுப்பில் குறைவு ஏற்பட்டாலும் அந்த மாணவ நாணயம நாட்டின் நன்மைக்கோ சமூக வளர்ச்சிக்கோ செல்லுபடியாகாது. இதைப் பெற்ருேர்களும் ஆசிரியர்களும நன்கு உணர்ந்து தம கடமைகளைச் செயலாற்றவேண்டும. அப்போதுதான் நாட்டில் நல்ல பிரஜைகளான நாணயங்களை உருவாக்க முடியும், நாடும் எல்லாத் துறைகளிலும் முன்னேறும.

ஒரு சந்தர்ப்பத்தில் ஒரு தாய்-அதிலும பொறுப்புணர்ந்த தாய்-குழந்தைப்பருவ முதல் கண்விழித்து தன்னை ஒடுக்கி குழந்தையின் நல் வளர்ச்சியே தன் இன்பம என்று எண்ணித் தன் உயிரினும் மேலாகக் கருதி வளர்த்து வந்த தாய் தன் பிள்ளையை, தன் ஒரே செலவத்தை, அன்பின் ரூபத்தை, ஆறுதலின் பிமபத்தை, தன் சொந்த இரத்தத்தை பழுக்கக் காய்ச்சிய, இருமபு கோலால் துடிதுடிக்கச் சூடு போட்டாள்.

ஏன் அவளுக்குப் பயித்தியம பிடித்து விட்டதா? இல்லை! அவளுக்கு மகன்மேல் இருந்த பாசம் பட்டுபோய்விட்டதா? இல்லை! கெட்ட நண்பர்களுடன் சேர்ந்து பணம வைத்து கோலி ஆடினன். சிறு வயதிலேயே சூதாடக் கற்றுக்கொண்டானே அப்பழக்கத்தை உடனே அகற்ற வேண்டும, மகன் நல்ல வழியில் திருந்த வேண்டும் என்ற ஒரே ஆசையால் அவனை தண்டித்தாள் அது அன்பின் தண்டிப்பு. அவளை ஏன் இப்படி செய்தாய் என்று யாராவது கேட்க முடியுமா? கேட்பது ஞாயமா? முறையா? இல்லை. கேட்க முடியாது, கேட்பதும முறையாகாது. ஏன்? தன் மகனின் பிற்கால நன்மைக்காக அப்படிச் செய்தாள்.

அவ்விதமாகவே ஆசிரியர்களும் மாணவர்கள் தவறிப்போகும போது அவர்களைத் திருத்த, நலவழிப்படுத்த கடிந்துகொள்கிருர்கள், தண்டிக்கிருர்கள். இது தவரு? இதைச் செய்யாமற் போனுலும அவர் தம கடமையில் தவறிய வராக எண்ணப்படுவாரே. அதை உணர்ந்த பெற்ருேர்கள் ஆசிரியர் சரிவர தம் கடமையைச் செய்வதைக் குறித்து மகிழ்கிருர்கள். அவரைப

பாராட்டுகிறார்கள். நன்றியுள்ளவர்களாகவும் இருக்கிறார்கள்.

அதுபோலவே எல்லா பெற்றோர்களும் ஆசிரியர் கடமையை உணர்வது நன்மையை அளிக்கும். மாணவர் பூரண வளர்ச்சியடையவேண்டுமானால் அதாவது உடல், உள்ளம், ஆத்துமா என்ற மூன்றிலும் ஒருங்கே வளர்ச்சிபெற வேண்டுமானால், நாட்டில் செல்லுபடியாகும் நல்ல நாணயங்களாகத் திகழவேண்டுமானால் ஆசிரியர்களும் பெற்றோர்களும் ஒத்துழைத்துத் தம் கடமைகளைச் செவ்வனே செயலாற்ற வேண்டும்.

நாட்டின் நாணயங்களைப் பெருக்கி நம நாட்டின் வளர்ச்சியையும் மேம்பாட்டையும் உயர்த்த ஆசிரியர்களும் பெற்றோர்களுமாகிய நாம் பொறுப்புணர்ந்து ஒத்துழைப்போமாக.

சா. மோசஸ் எபிநேசர்.
(ஆசிரியர்)

வழிகாட்டி

உலகத்திலேயே முதன் முதல் மக்கட்பிறவிக்கு ஏற்ற இடம் கீழ்நாடுதான் என்பது வரலாறு கண்ட சான்று. அக்கீழ் நாடுகளிலும் பல்வளந் திகழும் பழந்தமிழ்நாடே சிறப்புடையது. தமிழ் நாடு எது என்பதைப் பற்றிப் பலரும் பலவாராகக் கருதுகின்றார்கள். எது எப்படியாயினும் பாண்டி வளநாடே தமிழை வளர்த்த சிறந்த நாடாகும் என்பதில் ஐயமில்லை. அப்பாண்டி வளநாட்டின் தலைசிறந்த நகரமாகிய மதுரையிலே அன்பின் அடிச்சுவட்டிலே அரசு செலுத்திய பாண்டிய மன்னர்கள் முதல் இடை கடை என்ற முச்சங்கங்களை நிறுவிப் பைந்தமிழ்ச் சோலையைப் பாங்குற நடத்தி வந்தனர். அச்சங்கங்களில் முதற் சங்கத்தில் அகத்தியமும் இரண்டாம் சங்கத்தில் ஒல்காப் பெரும் புகழ் தொல்காப்பியமும் கடைச்சங்கத்தில் பத்துப் பாட்டு எட்டுத்தொகை, சிலப்பதிகாரம், மணிமேகலை, பதினெண்கீழ்க்கணக்கு முதலிய நூல்களும் தோன்றின. இவைகளை நாம் பொதுவாக இலக்கியங்கள் எனக் கூறுகின்றோம் இவ்விலக்கியங்களையும் இவற்றின் ஆசிரியர்களையுமே நாம் வழிகாட்டிகளாகக் கொள்ளலாம் என்பதே எனது எண்ணம்.

இலக்கியம் எவ்வாறு வழிகாட்டியாகும் என்றும் அவ்விலக்கியத்தைப்பற்றி மக்களின் கருத்து என்ன என்றும் ஒரு சிறிது ஆராய்வோம்.

இலக்கியம் என்ற சொல்லுக்கே குறிக்கோளைத் தன்னகத்தே கொண்ட கருவி எனப் பொருள்படும். மக்களுடைய விழுமிய கருத்துக்களைத் தன்னகத்தே கொண்ட காரணத்தால் அதற்கு இலக்கியம் எனப் பெயர் உண்டாயிற்று. குறிக்கோள் என்பது ஒவ்வொருவருக்கும் இன்றியமையாதது. அலை கடல் நடுவின் பலகலம் செலுத்தும் மாலமி குறிக்கோள் அற்ற வகை இருப்பின் அவனது மரக்கலங்கள் செல்லுந் திசையறியாது நடுக்கடலில் பேரலைகட்கும் பெரு மீன்கட்கும் சூறாவளிக்கும் இரையாவதுண்டு. அவ்வாறு இன்னல்கள் இன்றிக் கடலை கடக்க அவனுக்கு வழிகாட்டியாகக் கலங்கரை விளக்கம் தேவைப்பட்டது. அதுபோலவே வாழ்க்கைத் தோணி ஏறி உலகக் கடலை கடந்து வளங்காணச் செல்லும் வாழ்க்கைத் துணைவர்கள் குறிக்கோளுடன் வாழவேண்டும் என்பதற்கே வழிகாட்டியாக எழுந்தது இலக்கியம். காதலர் இருவர் கருத்தொருமித்து ஆதரவு பட்டதே. இல் வாழ்க்கை என்பதை அறிவுறுத்த எழுந்ததே இலக்கியம்.

இவ்வாறு உன்னத கருத்துக்களைக் கொண்ட இலக்கியங்களைப் பற்றி இன்று மக்கள் என்ன நினைக்கின்றார்கள். ஏதோ வேலையற்றவன் செய்தது இலக்கியம். சில வரிகள் நிரல் படக் கோக்கப்பட்டது இலக்கியம். வாழ்க்கைக்குப் பயன் படாதது இலக்கியம் என்றெல்லாம் கூறக் கேட்கிறோம்.

ஆம்! அவன் வேலையற்றவனே. என்ன வேலையற்றவன் பகலெல்லாம் உழைத்து உழைத்து நெற்றி வியர்வை நிலத்தில் சிந்தி அலுத்துப்போகின்றார்களே பாட்டாளி மக்கள். அவர்கள் வயிற்றில் மண்ணைப் போடும் வேலையற்றவன் எழடுக்கு மாளிகைகள் எழில் பெற அமைத்துக்கொடுத்தும் ஒண்டக் குடிசையின்றிச் சாலையின் ஓரத்தில் திண்டாடுகின்றானே திக்கற்றவன். அவன் வயிற்றில் மண்ணைப் போடும் வேலையற்றவன் பொருள் வேட்டையாடுவதையே தனக்குப் பொழுது போக்காகக் கொள்ளும் வேலையற்றவன். அவர்கள் எப்பொழுதுமே இவ்விதமான இழி தொழிலில் ஈடுபடமாட்டார்கள் ஏன்? அவர்கள்தான் சமுதாய சிற்பிகளாயிற்றே தனக்கென வாழாது பிறர்க்கென வாழும் தகைமையாளர்கள் அவர்கள். யாதும ஊரே யாவரும கேளிர் என்று பறைசாற்றும் பாவலர் அவர்கள் பழியெனின் உலகுடன் பெறினும கொள்ளாத பண்புடையவர்கள் அவர்கள். இதிலிருந்து வேலையற்றவர்கள் யார் என்பதை நீங்களே அறிந்து கொள்ளுங்கள்.

நிரல்படக் கோக்கப்பட்டது இலக்கியம். ஆம்! அரசன் முதல் ஆண்டிவரையிலுள்ள எல்லா மக்களும் விரும்புவது ஒழுக்கம் தானே! அவ்வொழுக்கத்தைத் தன் பாவிலும் பரப்பினான் பாவலன். இதில் ஏதாகிலும் பழியுண்டோ!

அடுத்து வாழ்க்கைக்கு பயன்படாதது இலக்கியம்! ஆம்! கோணலான வாழ்க்கைக்குப் பயன்படாது. குறிக்கோளுடைய வாழ்க்கைக்குத் துணை செய்யும். கல்தோன்றி மண் தோன்றா காலத்தே வாளொடு முன்தோன்றி மூத்த குடியாகிய தமிழ் மக்களின் இரு கண்கள் போன்றவை தொல்காப்பியமும திருக்குறளும. அவற்றுள் ஒன்றாகிய திருக்குறளில் வாழ்க்கைக் கட்டிடத்தையே சித்தரித்துக் காட்டுகிறார். ஒருவன் இல் வாழ்க்கையைச் சரிவர நடத்த வாழ்க்கைத் துணைவியை ஏற்று நன்மைகளை பெறவேண்டுமென்றும பிறகு அவர்களோடு அன்புகொண்டு வீட்டிற்கு வரும விருந்தினரை இனியவை கூறி உபசரிக்க வேண்டுமென்றும அவ்வாறு விருந்தோம்பும பண்புடையவன் மனக்குற்றம மொழிக் குற்றம மெய்யால் நிகழும ஒழுக்கக் குற்றம முதலியன இன்றி உலகத்தார் மட்டும் ஒப்புரவறிதலும வறியார் மட்டும ஈகையும கொண்டு இவ்வுலகில் புகழை நிலை நிறுத்த வேண்டுமென்று இல்லறவியலில் கூறிச்செல்கின்றார் வள்ளுவர். இவையெல்லாம வாழ்க்கைக்குப் பயன்படாததா? இவை வாழ்க்கைக்கு பயன்படாத கருத்துக்களாக இருப்பின் பாரதியார் வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான் புகழ் கொண்ட தமிழ் நாடு என்று வள்ளுவரையும தமிழ் நாட்டையும போற்றியிருப்பாரா?

நெஞ்சை அள்ளும சிலப்பதிகாரத்தில் இளங்கோவடிகள், இன்றியமையாத மூன்று கருத்துக்களோடு தான் துறவறத்தை மேற்கொள்வதற்குக் காரணமான ஒற்றுமையைத் தன் காவியத்தில் காட்டி விடுகின்றார். நன்மைத் தீமைகளை பிரித்தறியும பகுத்தறிவு படைத்த மக்களிடையேயும் காணமுடியாத ஒற்றுமையை அஃறிணைப் பிராணிகளிடத்தில் காண்கின்றார். "வாளவரி வேங்கையும மான் கணம மரா" எனக் கூறுகின்றார். இவ்வாறு புலியும மானும ஒற்றுமையாக வாழவேண்டுமென்று கனவு காண்கின்றார். இது முடியுமா என்பது முற்றும உணராதவர் வினா. அது முடிந்தாலும முடியாவிட்டாலும கவிஞன் காணும புத்துலகிலே அவ்வாறு ஒற்றுமையை நிலை நாட்ட முயல்கின்றான். மேலும் பாரதியார் நம நாடு சுதந்திரம அடைவதற்கு முன்பே "ஆனந்த சுதந்திரம் அடைந்துவிட்டோமென்று ஆடுவோம' என்று கூறி சுதந்திரம அடைந்ததாகக் கண்ட கனவு இப்போது நனவாகவில்லையா? அதுபோல ஒரு காலத்தில அவர் கனவும நிறைவேறும அந்த நாளே நன்னாள். அதுவே பொன்னாள். அந்த நாளை நாமும எதிர்கொண்டு வரவேற்போம

இவ்வாறு வாழ்க்கை கட்டிடத்தை நிறுவி அதற்கு வேண்டிய ஒற்றுமை செய்ந்நன்றி யறிதல் முதலிய அருங்குணங்களைப் புகுத்தி மக்கள் வாழ்க்கையை நறுமணச் சோலையாக மலரச் செய்யும புலவர்களையும அவர்களால் இயற்றப்பட்டு நமக்கெல்லாம வழிகாட்டியாக உள்ள இலக்கியங்களையும மறவாது நிறைந்த பயனைப் பெறுவோமாக!

M. பழனி முத்து.

"வறியார்க்கு ஒன்றீவதே ஈகை"

(குறள்)

உலகத்து அரச குடும்பங்களின் வரலாற்றையும் பழந்தமிழ் நாட்டு வேந்தர்களின் குடும்ப வரலாற்றையும் ஆராய்ந்து பார்க்கும் போது தமிழரசரின் குடும்பங்களே மேம்பாடுடன் வாழ்ந்திருக்கின்றன என்பது புலனாகும். பண்டைய தமிழ் மன்னர்கள் தருமத்தோடு கூடிய ஆட்சி செய்து, குடிமக்களைத் தம குழந்தைகளாகப் பாவித்து அருள் செய்தனர். அரசுரிமையையடைய சூழ்ச்சிகள நடந்ததில்லை. அரசாங்கத்திற்கு விரோதமாகப் புரட்சிகள் கிளம்பினதில்லை. நாட்டில் கட்சிகள பல ஏற்பட்டதில்லை. இவ்வித சூழ்நிலையிலும் கருத்துக் கொவ்வாத ஒரு செயல் நடந்து இறுதியில முன்னைய நிலையையடைந்தது.

நம்மில அநேகருக்கு, பொற்காலம் எனப்படும சங்க காலத்தினிறுதியிலே வாழ்ந்த 'தலைக்கொடை வள்ளல்' எனப் பெயர்பெற்ற குமணப் பெருந்தகையின் வரலாறு தெரிந்திருக்கும. இம்மன்னன் தமபியால் காடு கடத்தபபட்டு தலைமறைந்து வாழலானான். காரணம் தமபி அரியணையை அபகரிக்கத் துணிந்து சூழ்ச்சியினால அண்ணனை காட்டில் வாழுமாறு செய்தான். அதோடு நில்லாமல் தமையன் உயிரோடிருக்குமளவும தன் அரசுரிமை நிலைக்காது என்ற எண்ணம தன்னை வருத்த பிறரின் வஞ்சக வசனிப்பினாலே அண்ணனின் தலைக்கு விலைவைத்தான். "குமணனின் தலையைக் கொணர்வர் செம்பொன் கோடி பெறுவர்" என பறையறிவித்தான். இந்நிலையில பெருந்தலைச் சாத்தனார் என்ற புலவா தன் கொடிய வறுமையைத் தீர்க்கும் வள்ளல் குமணனே என்றறிந்து அவரைத் தேடிக் கண்டடைந்தார். வள்ளலிடம தன் வறுமை நிலையினையும், தன உள்ளக்கிடக்கையையும் எடுத்துப்புகன்றார. மன்னன் உளம் நைந்தான். தமபியின பறைசாற்றலை புலவருக்குத தெரிவித்து உடைவாளை உருவிப புலவரிடம் கொடுத்து "என் தலைதனைக் கொண்டுபோய் தம்பி கைக்குக் கொடுத்து செமபொன் கோடி பெறுக" என்று கூறினான். புலவர் அவ்வாறே செய்வதாக வாளைப் பெற்று நேரே சென்று இளையன் முன்நின்று அவன் மனதை மாற்றினார். அண்ணலை மறுபடியும் அரியணையில் ஏற்றி மகிழ் வெய்தினார்.

பார்த்தீர்களாக நம் பழந்தமிழ் நாட்டின் பண்பாட்டை! இரப்போர்க்கு இல்லை என்னாது ஈந்து கொண்டேயிருந்த கரங்கள் வறுமையிலும் தன் தலையைக் கொடுக்கத் துணிந்தது. மாணவரே! பெற்றோரே! நாமும் பழந்தமிழ் நாட்டின் செல்வக் குழந்தைகள் தான். நமக்கும் அத்தகைய சீரிய குணங்கள் இருக்கத்தான் செய்கிறது. சமீபத்தில் தஞ்சையிலும், பிற இடங்களிலும் நடந்த கோர சம்பவங்களைப் பத்திரிகை வாயிலாக அறிந்தோம். செல்வச் சீமான்களும தனவந்தர்களும், தொழிலாளர்களும் மற்றும் பலரும் தங்களாலியன்ற உதவியை எவ்வளவு உதாரத்துவமாக அளித்தார்கள் என்பதைப் பிறர் சொல்லக் கேட்டோம். வாசித்தறிந்தோம். கலைஞர்களும நடிகர்களும் சங்கங்களை நிறுவி பெரிய உதவிகளைச் செய்ய முன்வரும் முற்போக்கான நிலைக்கு மாறிவிட்டது நம தாயகம். ஒரு பகுதியிலுள்ள தன் மக்கள் படும் இன்னலைப் போக்க மற்றோர் பகுதியினர் எடுத்துக் கொண்ட முயற்சிகளைக் கண்ட நம் இயற்கையன்னை மகிழ்ச்சிக் கடலில் மிதந்திருப்பாள். இதைத் தவிர, நம் நாட்டில் எத்தனையோ மக்கள் வறுமை நிலையில் இருந்து வருந்துகிறார்கள். காணார், கேளார், முடவர் இன்னும் பல கொடிய நிலையிலிருக்கிறவர்கள் ஒருவேளை அன்னத்திற்காக அல்லல் படுகிறார்கள். இவர்களுக்கும் ஆதரவளிப்பது நம கடமை.

இவ்வித சந்தர்ப்பங்களில் எங்கள் தலைமையாசிரியர் எடுத்துக்கொள்ளும் முயற்சிகள் பாராட்டற்குரியது. குருடர், ஊமையர், அங்கவீனமுடையவர் போன்ற ஏழை மனிதர் எங்கள ஆதரவை நாடி எங்கள் பள்ளியை அடிக்கடி முற்றுகையிட்டு தலைவரைக் கேட்கின்றன. அச்சமயத்தில் தலைமையாசிரியர் சொல்லும் வார்த்தையைக் கேட்டமாத்திரத்தில் வகுப்புக்கு வகுபபு போட்டியிட்டுக்கொண்டு

உதவிகளைச் செய்ய முன்வருகின்றனர். ஏன் செய்யமாட்டார்கள். தலைக்கொடை வள்ளலின் பரம்பரையாயிற்றே. ஆனால் நாமும் நம் நாடும் இவ்விஷயத்தில் இன்னும் உயர்நிலையையடைய வேண்டும். தலையைக் கொடுக்க முன்வரா விட்டாலும் தங்களாலியன்ற உதவியையாவது செய்ய முன்வரவேண்டும். ஆகவே நம குழந்தைகள் ஏழைகளுக்கென்று நம்மிடம சிறு தொகைப பணம கேட்கும்போது மன முவந்து கொடுக்கவேண்டும். இவ்வுலகிலுள்ள ஏழை மக்களுக்கு ஆதரவளிக்கும்போதும், உதவி செய்யும்போதும் ஆண்டவன் நமக்குக் கடனாளியாகிறார்.

எதிர்காலத்திலே நாமும் நம் குழந்தைகளும பிறர் கேட்காமலே, பெரியோர் தெருத் தெருவாய் அலைந்து தண்டல் செய்யாமலே, பிறர் துன்பத்தைக் கேட்ட மாத்திரத்தில் உதவி செய்ய முன்வரும் நிலைக்கு மாறவேண்டும். இதை நாம் உணருகிறோமா? நம சமுதாயம உணருமா?

Soranam Victor

குடியரசு தினம்

(Speech delivered by Major Xaviour Calestine)

தலைமையாசிரியர் அவர்களே! உதவி ஆசிரிய மார்களே!! அருமைப பிள்ளைகளே!!

இன்று நடைபெறும குடியரசு விழாவிற்கு என்னைத் தலைமை தாங்கும்படி கேட்டுக் கொண்டதற்கு முதலாவது எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

நான் இன்று உங்கள் முன் பேசுவதற்காக அதிக பெருமை கொளகிறேன். நான் பெருமை கொள்வது ஓர் ராணுவ அதிகாரி என்பதற்காக அல்ல, இப்பள்ளியின் பழைய மாணவன என்ற ஒரே காரணத்திற்காக. நான இதே பள்ளியில நான்கு ஆண்டுகள படித்தேன் நான் தற்சமயம இப்பதவியிலிருப்பதற்கு மூல காரணம் இப்பள்ளியில் இதோ உங்கள முன் இருக்கும பழைய ஆசிரியர்களிடமிருந்து பெற்ற பயிற்சியே. இப்படி நான கூறுவது முகதாட்சணியம அல்ல. இதை என் முழு மனதோடு கூறுகிறேன்.

உங்கள் எல்லோருக்கும் இன்று நமது குடியரசு தினம என்று தெரியும. இந்த நாள இந்திய சரித்திரத்திலே மிகச சிறநததோர் நாள 1947-ஆம் ஆண்டு ஆகஸ்ட்டு மீ 15-ஆம் தேதி காந்தியடிகளின் தலைமையின் கீழ் சுதந்திரம பெற்ற நம நாடு 1950-ஆம ஆண்டு ஜனுவரி மீ 26—ஆம தேதி குடியரசு நாடாக ஆயிற்று. நம நாடு எப்படி ஒரு குடியரசு ஆயிற்று என்பதைப் பற்றிச் சொல்ல விரும்பவில்லை. காரணம் காலமுமில்லை. நீஙகளும பொறுமையோடு அதைக் கேட்பது சந்தேகம். ஆதலால் நாம இப்போது ஏற்றிய தேசிய கொடியைப பற்றிச் சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். இந்தக் கொடி நம நாட்டின் சின்னம. இக்கொடி நம சுதந்தரத்தின் போராட்டத்தை எடுத்துக் காட்டுகிறது.

நம கொடியில் மூன்று வர்ணங்களையும் அதன் நடுவில் அசோக சக்கரத்தையும் காண் கிறீர்கள. இந்த மூன்று வர்ணங்கள எதைக் காட்டுகின்றன என்று உஙகள் குடிமைப் பயிற்சி ஆசிரியர் கூறியிருப்பார். நான் இந்தக் கொடியைப பார்க்கும்போதெல்லாம இதன் நடுவிலிருக்கும சக்கரம மற்ற வர்ணஙகளைவிட நன்றாக எடுத்துக்காட்டுகிறது இநதச் சக்கரம நம நாட்டின் முன்னேற்றத்தைக் காண்பிக் கிறது என்று உங்களுக்கு நன்றாகத் தெரியும. இது தேசத்தின் முன்னேற்றம மாத்திரம அல்ல இந்திய பிரஜைகளாகிய ஒவ்வொரு வரின் முன்னேற்றத்தையும் காண்பிக்கிறது என்பது என் நம்பிக்கை. உங்களைப பொருத்த மட்டும இம முன்னேற்றம் தேக ஆரோக்கியம மனோசக்தி, அறநெறி மார்க்கம என்ற எல்லாத் துறைகளிலும இருக்கவேண்டும.

சுதந்தரம பெற்ற பிறகு நம இந்திய நாடு எல்லாத் துறைகளிலும வெகு விரைவாக முன் னேறுகிறது. நாம் அரசியல் முன்னேற்றம மாத்திரம அல்ல பொருளாதாரத் துறையிலும முன்னேறுகிறோம். இநதப் பொருளாதார முன்னேற்றத்தை நம் இந்திய சர்க்கார வகுத்

துள்ள பல திட்டங்களில் காணலாம். இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டமும் இதற்காகவே வகுத்துள்ளது. நம நாடு சர்வதேசங்களுக்குள் ஓர் ஸ்தானத்தைப் பெற்றிருக்கிறது. நம நாடு முன்னேற்றம் அடைவதுபோல், இப்பள்ளியும், தலைமை ஆசிரியர் ஏனைய ஆசிரியர்களுடைய ஒத்துழைப்பினால் முன்னேறுவதைப் பார்க்கும் போது எனக்கு அதிக சந்தோஷம். இந்த முன்னேற்றத்திற்கிடையில் இதர ராஜ்யங்களில் தற்காலங்களில் நடைபெறும சில சம்பவங்களுக்கு முற்றுப் புள்ளி போடாவிட்டால் நாட்டு முன்னேற்றத்திற்குத் தடையே ஒழிய, இந்த முன்னேற்றத்தைப பலப்படுத்துதற்கல்ல. தற்காலங்களில் மாணவர்கள் அரசியல் விஷயங்களில் அதிகமாகப பங்கெடுத்துக் கொள்வது அதிக விசனமான காரியம். இவ்வாறு மாணவர்கள அரசியல விஷயங்களில பங்கெடுத்துக்கொள்வது அவர்கள் முன்னேற்றத்திற்குத் தகுதியானதல்ல என்பதை நான் உங்களுக்கு அழுத்தமாகச சொல்லுகிறேன். இந்தப் பள்ளியைப பொருத்த மட்டும் இது போன்ற விஷயங்களில் பங்கெடுத்துக் கொள்ளாதது எனக்கு அதிக சந்தோஷத்தை அளிக்கிறது. வருங்கால பிரஜைகளாகிய நீங்கள் அரசியல் விஷயத்தில் உங்கள எண்ணத்தைச் செலுத்தாமல அதை அரசியல் துறையில் ஈடுபடுபவர்களுக்கு விட்டுவிடுங்கள். அதைப் பற்றிய கவலை உங்களுக்கு வேண்டாம்

தற்பொழுது உங்கள் வேலை வெகு சாதாரணமானது. அதாவது உங்கள் முழுக்கவனத்தைப் படிப்பின் மேல் செலுத்த வேண்டும. உங்கள் ஆசிரியர்களிடத்திலும் மற்ற பெரியவர்களிடத்திலும் அவர்கள் சொல்லும் சொல்லைத் தட்டாமல் கீழ்ப்படிந்து ஒழுக்கத்தைக் கற்றுக்கொள்ளுங்கள். இவ்வாறு கற்கும் ஒழுக்கம தான் உங்கள் பிற்கால வாழ்க்கைக்குப பெருந்துணையாயிருக்கும். இந்த ஒழுக்கம் உங்கள் பள்ளியில் மாத்திரம் அல்ல விளையாட்டு மைதானத்திலும மற்ற எல்லா இடங்களிலும் இருக்க வேண்டும்.

கடைசியாக உங்கள் பள்ளியின் சின்னமாகிய ஜெபமும் வேலையும் மிக மேன்மையாக அமைந்திருக்கிறது. நீங்கள எந்தக் காரியம் செய்தாலும அது கல்வியோ விளையாட்டோ உங்கள் முழுத்திறனை அதில் காட்டவேண்டும் என்பதை இந்தச் சின்னம் அறிவுறுத்துகிறது. உங்கள் சின்னம் ஜெபம வேலை; இதோடு ஒழுக்கத்தையும் மனதில் வைத்தால் உங்கள் வாழ்க்கையில் வெற்றியடைந்து ஓர் நல்ல பாரத குடிமகனாகத் திகழ்வீர்கள் என்பதில் ஐயமில்லை.

இவ்வளவு நேரம் ஒழுங்காக சப்தம் செய்யாமல் பொறுமையோடு என் சிறு உரையைக் கேட்டதற்கும் எனக்கு அழைப்பைக் கொடுத்த தலைமையாசிரியர் அவர்கட்கும் மற்ற ஆசிரியர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சேவியர் செலஸ்டின்.

அதிசயகள்: உங்களுக்குத் தெரியுமா?

1. எகிப்து பிரமிட்டுகளில் வைக்கப்பட்டிருந்த இறந்த எகிப்து மன்னர்களின் உடல் 1000 வருஷம அழுக்கபபடாத லினன் துணியால் சுற்றப்பட்டிருக்கின்றன!

2. தஞ்சை பிருகதீஸ்வரர் ஆலயத்தின் நிழல் தரையில விழுவதில்லை. அதன் விமானம 80 டன் எடையுள்ளது. பளுதூக்கிகள் இல்லாத அக்காலத்தில் இவ்வளவு பெரிய எடையுள்ள ஒரே கல் அவ்வளவு உயரத்திற்கு எப்படி எடுத்துச செல்லபபட்டிருக்கும?

3. உலக அதிசயங்களில் இரண்டாவது எனக் கருதப்படும தாஜ்மஹால், ஷாஜ்ஹானால் கட்டப்பட்டபொழுது, வைரங்களும் நவ ரத்தினங்களும், தங்கத் தகட்டு வேலைபாடுகளும் சுவரில் பதிக்கப்பட்டிருந்தன. இவ்வுலக உன்னதத்தில் அவைகள் இப்போது காணவில்லை.

அவரின் மயிலாசனம் 200 கோடி ருபாய்கள் மதிப்பிடப்பட்டுள்ளது. ஷாஜஹான் தங்கியிருந்த ஓர் இடத்தில் பதிக்கபபட்டிருக்கும்

பளிங்குகள் ஒவ்வொன்றிலும் தாஜ்ஜின் பிரதி பிம்பம் தெரிந்ததாம்.

4. நமது தலைக்கபாலம் 14 தட்டை எலும்புகளால் ஆன ஓர் எலும்புப் பெட்டி. அதன் உள்ளிருக்கும் மூளையில் சிறு கலக்கமோ, அதிர்ச்சியோ ஏற்பட்டால்கூட நிலையை இழக்க நேரிடும்.

5. உலக அதிசயங்களில் முதலாவது எனக் கருதப்படும் பைசா நகரின் சாய்வு கோபுரம், ஒவ்வொரு ஆண்டாகச் சாய்ந்து கொண்டே வருகிறது. இன்னும் 400 ஆண்டுகளில் கோபுரம் பூராவும் சரிந்துவிடுமெனக் கணித மேதைகள் கணித்துள்ளனர்.

6. அதிக ஆச்சரியமோ, அல்லது அதிகக் கவலையோ ஒரு மனிதனை எளிதில் கொன்றுவிடும்.

7. உலக ஜனத்தொகையில், சைனா முதலாவதாகவும், இந்தியா இரண்டாவதாகவும் ஸ்தானம் பெறுகின்றது.

8. இந்திய மணி காலத்திற்கும், இங்கிலாந்து மணி காலத்திற்கும் மணிநேரம் வித்தியாசம்.

9. தாயார்:- பறக்கும் விமானத்தில் குறும்பு செய்யும் மகனைப் பார்த்து (வீட்டு ஞாபகமாக) சீனு ஏண்டா உள்ளேயே விளையாடித் தொந்திரவு செய்கிறாய். வெளியேதான் போய் விளையாடேண்டா

10. உபாத்தியாயர்:- வட தென் துருவங்களில் என்ன காணலாம்?

பையன்: (மாதிரி கோளத்தை உற்று நோக்கிய வண்ணம்) சில கம்பிகளும் ஆணிகளும் ஸ்க்ரூகளும் ஸார்.

11. கைக்கெடிகாரம் ஒரு நாளைக்கு——— முறை டிக் டிக், என்று சத்தமிடுகிறது.

S. V. Balraj

அன்றும் இன்றும்

உலகில் நடந்த பல்வேறு நிகழ்ச்சிகளையும் நாம் அக்கால சிற்ப ஓவியங்களைக் கொண்டும் கட்டிடங்களைக் கொண்டும் புதை பொருள்களைக் கொண்டும் ஒருவாறு அறியலாம். ஆனால் மக்களின் உள்ளக் கிடக்கையை அக்காலக் கவிஞனின் சொற்படங்களால்தான் நாம் அறியமுடியும். அச்சொற்படங்களைத் தன்னகத்தே கொண்டதுதான் இலக்கியம். ஆகவே இலக்கியம் அக்கால அரசியல், மக்களின் பழக்க வழக்கங்கள் இவைகளைக் காட்டும் சமூகக் கண்ணாடி என்று கூறலாம். அக்கண்ணாடியின் சில அரிய நிகழ்ச்சிகளை இக்காலத்தோடு ஒப்பிட்டு நோக்குதலே இத்தலைப்பின் நோக்கமாகும்.

ஆதிகாலத்தில் மனிதன் காட்டுமிராண்டியாய் உண்ண உணவும் உடுக்க உடையுமின்றிக் காடுகளில் கிடைக்கும் காய்கனி கிழங்குகளையே உணவாகவும் தழையிலைகளையே ஆடையாகவும் கொண்டு தன் வாழ்க்கையை நடத்தி வந்தான். தீக்கடைக் கோலாலும் கற்களைத் தேய்ப்பதாலும் நெருப்புண்டாக்கியும் கற்களால் ஆயுதங்களைச் செய்தும் வந்தான். இவையெல்லாம் பண்டை வரலாறு தரும் சான்று.

ஆனால் இன்று அதே மனிதன் இமயத்தின் உச்சியையும் எட்டிப் பிடித்துவிட்டான். அகில உலகத்தில் நடக்கும் அரிய செய்திகளையும் அவ்வப்பொழுது அறியும் வாய்ப்புப் பெற்றிருக்கிறான். பல்லாயிர மைல்களுக்கு அப்பாலுள்ள பல நாடுகளையும் பார்த்து மகிழ காற்றிலும் கடுகிச் செல்கின்றான். கலைக் கலையாக்கி அக்கலையிலே உலக அதிசயங்களை உருவாக்கி உவகை எய்துகின்றான். நெருப்பை உண்டாக்க நெடுநேரம் காத்திருந்த மனிதன் இன்று இருண்ட உலகத்தை ஒளிபெறச் செய்துவிட்டான் தன் சாதனையால்.

கல்வி :— சங்ககாலத்தில் கணக்காயர் எனப்படும் பாலாசிரியர் முதற்கொண்டு அரசன்

ஈறாகவுள்ள அனைவரும் கவிபாடும் ஆற்றல் பெற்றிருந்தனர். "அரசரும் குடிகளும் அம்மவேறல்லர் உரை செயின் உயிரும் உடலும் போல் வரால்" எனவும் அரசன் எவ்வழி அவ்வழிக் குடிகள் எனவும் போற்றப்படும் அக்காலத்தில் கல்வியின் பெருமையைப் பற்றி அரசர்களே பலபடப் பாராட்டியிருக்கின்றனர் என்றால் மக்களின் மன நிலையை நாம் மதிப்பிடவே தேவையில்லை. ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் என்ற அரசன் "கீழ்ப்பால் ஒருவன் கற்பின் மேற்பால் ஒருவனும் அவன் கண்படுமே" என்றும் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் தான் வஞ்சினம் கூறும்போது நான் இப்போரில் வெற்றியடையாவிடில்

"ஓங்கிய சிறப்பின் உயர்ந்த கேள்வி
மாங்குடி மருதன் தலைவனாக
உலகமொரு நிலவிய பலர்புகழ் சிறப்பின்
புலவர் பாடாது வரைக என் நிலவரைக"

என்றும் கூறினான் என்றால் என்னே அவர்களது கல்வியில் பால்வைத்த மனநிலை.

ஆனால் அதே கல்வியின் நிலை இன்று எவ்வாறு உள்ளது? படித்தவர்களின் எண்ணிக்கை என்ன என்று பார்க்கும்போது மனம் பதறுகின்றது. இந்த அவல நிலையை அகற்றவே அரசாங்கத்தார் கட்டாயக் கல்வி, முதியோர் கல்வி ஆகிய பல வழிகளில் பாமர மக்களைப் படிக்கச் செய்கின்றனர். நாட்டின் முதுகெலும்பு போன்ற கிராம மக்களை முன்னுக்குக் கொண்டுவர முயற்சிக்கின்றனர். இது போற்றற்குரியதே :

போர்முறை :— போர் எனில் புகலும் புனைகழல் மறவர்களும் அசைந்தாடும் காற்றினால் அதிர்க்கும் முரசத்தின் ஒலியைக் கேட்டுப் போர்முரசம் என்று பூரிப்படையும் போர்வீரர்களும் கணவனும் பெற்றோரும் உற்றோரும் விண்ணக மாந்தர்க்கு விருந்தாயின காலத்தும் அதுகண்டு அஞ்சாது போர்ப்பறையின் ஒலி கேட்டு தன் ஒரே மகனைப் போர்க்கோலம் பூணச்செய்து வேலைக் கையிலே கொடுத்துச் செருமுக நோக்கிச் செல்கென விடுத்த வீரத் தாய்மார்களும் வாழ்ந்த நாடு. இவ்வாறு முன் வைத்தகாலைப் பின்வையாத மறவர்களாயினும் அறநெறி தவறிப் போருக்குச் சென்றதில்லை. தாங்கள் போருக்குச் செல்லுமுன் "எம அம்பு கடிவிழுதும நும் அரண் சேர்மின்" என்று பசு, பெண்டிர், பார்ப்பனர், பிணியுடையோர் முதலியவர்களுக்கு அறிவிப்பர். உடனே பகுத்தறிவு படைத்த மனிதர்கள் பாதுகாவலான இடத்திற்குச் சென்று விடுவர். ஆனால் பசுக்கள் மட்டும் அங்கேயே இருக்கும். அரசர் அவற்றைக் கொண்டுவர வெட்சிப்பூ சூடிய வீரர்களை அனுப்புவான். அவற்றை மீட்க கறந்தை வீரர்கள் வருவார்கள். பின் இருவருக்கும் போர் நடக்கும். பின் மண்ணாசையால் போர்தொடுத்து இறுதியில் வெற்றிபெற்றதும் வாகை சூடுவர். இதே போன்று அறநெறி தவறாது தனியிடை அகப்பட்ட இலங்கை வேந்தனை இராமன் இன்றுபோய் நாளைநின் தானையொடுவா என்று அனுப்பினான் என்றால் மறத்திலும் அறத்தைக் கண்டார்கள் என்று ஏன் சொல்லக் கூடாது.

ஆனால் இடைக்காலத்தில் பந்திக்கு முந்திக் கொள் படைக்குப் பிந்திக்கொள்" என்பன போன்ற பழமொழிகளை உண்டாக்கி மக்களைக் கோழைகளாக்கினர். விஞ்ஞான உலகம் என்று போற்றப்படும் இக்காலத்தில் அமெரிக்கா ரஷ்யா போன்ற மேனாடுகள் ஒன்றையொன்று போட்டியிட்டுக்கொண்டு அணுகுண்டு ஹைட்ரஜன் குண்டு முதலியவைகளால் நாட்டைப் பயமுறுத்தி வருகின்றனர். இவ்வாறு மேனாட்டார் ஆயுதங்களைக் காட்டி அச்சுறுத்தும்போது அமைதியைக்காக்க விரும்பும் அறிஞர்கள் பலர் தடுக்க முயல்கின்றனர். அந்த அறிஞர்களில் ஒருவர் நம நாட்டின் தலைவராவர். பண்டைகால மக்கள் மறத்தில் அறம் கண்டனா. ஆனால் தற்போது போர் என்ற சொல்லையே பயன்படுத்தக்கூடாது என்கின்றனர். ஆம! உலக சமாதானத்தை விரும்பும் எல்லா நாடுகளும் இதையேதான் கூறுகின்றது. போரிலே அறம். போர் என்பதே கூடாது. இரண்டில் எது சிறந்தது நீங்களே முடிவு கூறுங்கள்.

நாட்டுப்பற்று :— பெற்ற தாயையும் பிறந்த பொன் நாட்டையும நற்றவவானினும் நனி சிறந்ததாகக் கருதி வந்தனர் பண்டை மக்கள். தமிழ் நாட்டு அரசரை இகழ்ந்துரைத்த கனக விஜயன் தலையிலே கல்லைச் சுமத்தி வந்து

பத்தினி தெய்வத்திற்குப் படிவம் எடுப்பித்தான் சேரன் செங்குட்டுவன். இமயத்தின் உச்சியிலே புலிக்கொடியைப் பறக்க விட்டான் சோழன். இவைகளுக்கெல்லாம் காரணம் தன் நாட்டின் மேல் இருந்த ஒரே பற்றுதான். ஆனால் இன்றோ தன்னைப்பற்றி ஒருவன் இழித்துக் கூறினால் தாண்டிக் குதிப்பான். ஆனால் தன் நாட்டைப் பற்றியோ நாட்டிலுள்ள மற்றவர்களைப்பற்றியோ அயல் நாட்டார் இழித்துக் கூறும்போது அமைதியோடு இருப்பான். இதுதான் அன்றைக்கும் இன்றைக்கும் அயல் நாட்டிற்கும் நம் நாட்டிற்கும் உள்ள இன்றியமையாத வேறுபாடுகள். இதை அண்மையில் நம் நாட்டிற்கு வந்த ரஷ்ய தலைவர்கள் பர்மாவிற்குச் சென்றபோது அமெரிக்கர்களை இழித்துரைத்தார் என்று பர்மாவிலிருந்த அமெரிக்கர் அவர்களோடு எதிர்த்துப் பேசியிருந்ததை நாம் செய்தித்தாள் வாயிலாக அறிந்தோம்.

எனவே, நாமும் மேனாட்டார் போன்று விஞ்ஞான அறிவைப் பெற்று அதனை ஆக்க வேலைக்குப் பயன்படுத்த வேண்டும். கல்வியின் பெருமையை உணர்ந்து அதனைக் கற்பதோடு பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்களை எல்லாம் தமிழில் மொழி பெயர்த்து மறத்திலே அறங்காணும் மாண்பையும் நாட்டுப் பற்றையும் மனத்திலே கொண்டு நாடுபிடிக்கும் ஆசையில்லாவிட்டாலும் இருக்கும் நாட்டையாவது இழக்காமல் இருக்க ஆவன செய்வோமாக.

நான் யார்?

L. புருஷோத்தமன் III. F. A

1. குதிரை மீதேறி வாளை ஏந்திப் போர்க்களம் புகுந்து போர்வீரரை வீழ்த்தினேன். இந்து ராஜ்யத்தை ஸ்தாபித்தேன்.

2. அழகிற் சிறந்த அரசியை அடக்கம் செய்த அற்புதம் நான். உலகெங்கும் புகழ் பெற்ற உயர்வான கட்டிடம்.

3. மொகலாய அரசர்களில் சிறந்தவன் நான். மகான் என்ற பட்டத்தைப் பெற்றவன் நான்.

4. கல்தூண்களைக் கட்டுவித்தேன். நீதி மொழிகளைச் செதுக்கி வைத்தேன்.

5 நான் பட்டத்திற்கு வந்தேன். எனது சகோதரியைக் காப்பாற்றுவது முதல் விரதமாகக் கொண்டேன்.

6 எனது தலைநகரை டெல்லியிலிருந்து தேவகிரிக்கு மாற்றிய மதி நுட்பத்தை மக்கள் அறியாதார்.

7. நான் சீன தேசத்திலிருந்து இந்தியாவுக்கு வந்ததும் அஸ்ஸாம் நாட்டின் அரசரான குமார் என்பவர் ஆதரவின் கீழ் இருந்தேன்.

8. கி மு 321-ஆம் ஆண்டில் இந்துகுஷ் மலையைத் தாண்டி இந்தியாவிற்குள் புகுந்தேன். காபூலுக்கு அருகிலுள்ள பல சிற்றரசர்களை வென்றேன்.

9. அலஹாபாத் கல்வெட்டு என்னுடைய வீரத்தைப் புகழ்வதுடன் கவிபாடும் சக்தியையும் மிகவும் சிறப்பித்துக் கூறுகின்றது.

10. நான் ஒரு கல்விமான். தெலுங்கு மொழியில் மகா பண்டிதர் என்னுடைய அவையில் அஷ்டதிக்குக் கஜங்கள் என்ற எட்டு தெலுங்கு வித்துவான்கள் இருந்தார்கள்.

11. பிறந்த பொன் நாட்டை மறந்து புகுந்த இந்நாட்டைத் தாய் நாடாகக் கருதி பெண் கல்விக்குப் பாடுபட்டேன்.

12. ஆங்கிலேயரை எதிர்த்தேன். பெரிய சிப்பாய்க் கிளர்ச்சியை உண்டாக்கினேன். போர்க்களத்தில் வாளை ஏந்திய கையுடன் மண்ணவர் வியப்ப விண்ணவர்க்கு விருந்தானேன்.

13. உப்பு வரியை எடுத்துக் காட்டினேன், என்னுடைய நாட்டுப்பற்றை வெளிப்படுத்தினேன்.

14. நான் சமூக சீர்திருத்தங்கள் செய்தேன். பால்ய விவாகத்தை எதிர்த்தேன்.

15. நான் கிழக்கிலும் மேற்கிலும் உதிப்பேன். ஆனால் மாதம் ஓர் நாள் உதியேன்.

1. சிவாஜி 2. தாஜ்மஹால் 3. அக்பர்.
4. அசோகர் 5. ஹர்ஷவர்த்தனர்
6. முகமது துக்ளக் 7. யுவான் சுவாங்
8. அலெக்ஸாந்தர் 9. சமுத்திரகுப்தர்
10. கிருஷ்ணதேவராயர் 11. டாக்டர் அன்னி பெஸன்ட் 12. ஜான்ஸி லக்ஷ்மிபாய்
13. கோபால கிருஷ்ணகோகலே
14. மகாதேவ கோவிந்தரானடே 15. சந்திரன்

திருடன்! திருடன்!! திருடன்!!!

L. R. Jayachandran. I. F. C.

மாலை நேரம், சுமார் 4. 30 மணி இருக்கும். சோமசுந்தர முதலியாரர் தன் வீட்டு வாசல் திண்ணையில் உட்கார்ந்துகொண்டு வெற்றிலை பாக்கைத் தங்கபஸ்ப புகையிலையோடு கலந்து சுவைத்துக் கொண்டிருந்தார். அப்போதுதான் 12 வயதுள்ள நாகப்பன் என்ற சிறுவன் அங்கு வந்தான். அவன் பரட்டைத் தலையும் ஒட்டிய கன்னங்களும் குழி விழ்ந்த கண்களும் அவன் ஒரு வறுமையின் சின்னம என்பதை விளக்கியது. பேசவும் திராணியற்று சோகக் குரலில் ஐயா என்றான். முதலியார் தலை நிமிர்ந்து தன் கண்ணாடியைச் சரி செய்துகொண்டு அவனை ஏற இறங்கப பார்த்தார். பிறகு தன் அதிகாரத் தொனியில "யாரடா நீ"? என்று கர்ஜித்தார். பையன தயக்கத்துடன், அடக்கத்துடன், மெல்லிய குரலில் "நான் ஓர் ஏழை" அதோடு அனாதையும கூட. சிறு வயதிலேயே பெற்றோரால கைவிடப்பட்டவன். என் ஆதரவில் ஓர் தஙகையும விடபபடடிருக்கிறாள். வர்ண காகிதங்களால் பூக்கள் செய்து, அதை விற்று வரும லாபத்தில வயிற்றை வளர்த்து வருகிறேன். கடந்த இரண்டு நாட்களாய்க் காய்ச்சல் என்னைப் பிடித்ததால் என் பிழைப்பு நின்று விட்டது. கார்பபரேஷன் குடி தண்ணீர்தான் எஙகள உணவாயிற்று. பூக்கள் செய்தேன். அவைகளை ஒட்டுவதற்கு கோந்து இல்லை. தயவுசெய்து ஒரு அணா கடனாகத் தாங்கள். பூககள் விற்றதும திருப்பிக் கொடுத்து விடுகிறேன். என்று கெஞ்சினான்.

முதலியாருக்கு மனம இளகியது. பைய அ ு உதவ எண்ணங் கொண்டார். சட்டை பையில் கையை விட்டுத் துழாவினார். ஒரு ரூபாய் நோட்டு ஒன்று மட்டுமதான் இருந்தது. தம்பி சில்லரை இல்லையே என்றார். இதோ ஒரு நொடியில் மாற்றிக் கொண்டு வருகிறேன். முதலியார் சற்று யோசித்தார். பிறகு சட்டென்று அந்த நோட்டை பையனிடம் கொடுத்து ஒரு நொடியில் வரவேண்டும் என்று சொன்னாரோ இல்லையோ பையன் அதை வாங்கிக் கொண்டு வாயு வேகமாகக் கடைத் தெரு பக்கம் ஓடினான்.

முதலியார் திண்ணையிலேயே உட்கார்ந்து கொண்டிருந்தார். பல நிமிடங்கள் ஆகியும் பையன் திரும்பவில்லை. முதலியாருக்குச் சந்தேகம் ஏற்பட்டது. ஒரு மணி நேரமானது. பையன் திரும்பவில்லை. முதலியாருக்குக் கோபம் கோபமாக வந்தது, பையன் மேல். திருட்டுப் பயல் என்று முணுமுணுத்தார்: மணியும் ஆறு அடித்தது. தெரு விளக்குகள் எரிய ஆரம்பித்தன. முதலியாரால் பொறுக்க முடியவில்லை. திருட்டுப் பையன் அயோக்கியன், அவனைக் கண்டுபிடித்து என்ன செய்கிறேன் பார் என்று சொல்லிக்கொண்டே மேல் துண்டை உதறித் தோளில் போட்டுக்கொண்டு எழுந்தார். ஒரு சிறுமி அவரை நோக்கி ஓடி வந்தாள். அவளுக்குச் சுமார் எட்டு வயதிருக்கும். அவள் அழுதுகொண்டே முதலியாரிடம் எதையோ கொடுத்தாள். (கலியார் அவள் கொடுத்த பணத்தை எ. ரிப பார்த்தார். 16 அணாக்கள் இருந்தன. முதலியாருக்கு ஒன்றும் புரியவில்லை. "நீ யார்"? அந்தத் திருட்டுப் பயல் எங்கே? என்றார்.

ஐயா உம்மிடம் 1 ரூபாய் வாங்கிச் சென்றது என் ஒரே அண்ணன் நாகப்பன். அவர்தான் இதுவரை என்னைக் காப்பாற்றினார். உம்மிடம்

வாங்கிய ரூபாய்க்குச் சில்லரை மாற்றிக்கொண்டு உடனே திரும்பினார். ஆனால் எதிர் பாராத விதமாய் ஒரு கார் அவர் மேல் மோதி தலையில் பலத்த காயம் ஏற்பட்டு இப்போது தான் தர்ம வைத்திய சாலையில் உயிர் நீத்தார்.

சாவதற்கு முன் என்னைக் கூப்பிட்டு இந்த பணத்தை என்னிடம் கொடுத்து உம விலாசத்தையும் கூறினார். நான் தங்களிடம் கொடுக்கும் போது நன்றி சொல்லி இதைக் கொடுக்கும்படி என்னிடம் கூறினார் என்று சொல்லி ஓவென்று அழுதாள். முதலியாருக்கு என்ன செய்வதென்று தோன்றவில்லை. கண்ணில் நீர் தாரை தாரையாக வந்தது. ஏன்? இப்பேர்பட்ட உத்தமனை அதிலும் வறுமையிலும் உண்மையை கடைபிடிப்பவனைத் திருடன் என்று எண்ணினேனே என்று தன்னைத்தானே நொந்துகொண்டார். பிறகு ஏதோ நினைத்தவராக அச்சிறுமியை அவ்வுத்தமனின் தங்கையைச் சுவீகாரமாக எடுத்துக்கொண்டார்.

யார் திருடன்?

உலகம் காட்டும் உண்மைகள்

உலகத்திலிருக்கும் கருவிகளின் பெயர், கண்டுபிடித்த வருடம், கண்டுபிடித்தவரின் பெயர், இடம் இவைகளை கீழே காணலாம்.

(பொ. கேசவராஜன் மூன்றாம் படிவம் அ. பிரிவு.)

வருடம்	கருவியின் பெயர்	கண்டுபிடித்தவரின் பெயர்	அவர் பிறந்த இடம்
1450	அசையும் அச்சு இயந்திரம்	கட்டன்பர்க்	ஜெர்மனி
1643	பாரமானி	டோரிசெல்லி	இத்தாலி
1657	கடிகாரம	ஹியூஜென்ஸ்	டச்சு
1608	தொலைநோக்கு ஆடி	லிபபர் ஷிய்	டச்சு
1709	தெர்மா மீட்டர்	பாரன் ஹீட்	ஜெர்மனி
1752	இடிதாங்கும் கமபி	பிராங்க்லின்	அமெரிக்கா
1783	பலூன்	மான்ட்கோல் பியா	பிரெஞ்சு
1785	விசைத் தறி	கார்ட்ரைட்	இங்கிலாந்து
1793	பருத்தியை பிரிக்கும் பொறி	விட்னி	அமெரிக்கா
1798	துணி வெளுக்கும தூள்	டென்னண்ட்	இங்கிலாந்து
1800	மின்சார பாட்டரி	வோல்டா	இததாலி
1807	நீராவிப் படகு	புல்டன்	அமெரிக்கா
1815	சுரங்க பாதுகாபபு விளக்கு	டேவிட்	இங்கிலாநது
1816	ஸ்டெதாஸ்கோப்	லானெக்	பிரான்ஸ்
1820	கிளாவனோ மீட்டர்	ஸ்வீஜர்	ஜெரமனி
1824	எலக்ட்ரோ மாக்னட்	ஸ்டர்ஜீயன்	இங்கிலாந்து
1829	நீராவிப புகைவண்டி	ஸ்டீபென்ஸன்	இஙகிலாந்து
1831	டைனமோ	பாரடே	அமெரிக்கா
1832	தந்தி	மோர்ஸ்	அமெரிக்கா
1835	ரிவால்வர்	கோல்ட்	ஸ்வீடன்
1835	ஸ்குரூ (திருகு ஆணி)	எரிக்ஸன்	பிரான்ஸ்
1839	நிழற்படம் பிடித்தல்	லூயி டாக்கர்ரே	ஸ்காட்லாந்து

வருடம்.	கருவியின் பெயர்	கண்டுபிடித்தவரின் பெயர்	அவர் பிறந்த இடம்
1842	ஈருருளி (சைகிள)	மாக்மிலான்	இங்கிலாந்து
1845	சிமெண்ட்	ஆஸ்பிடின்	அமெரிக்கா
1846	தையல் பொறி	எலியாஸ் ஹோவே	இங்கிலாந்து
1847	குளோரோபாம்	கிமஸன்	அமெரிக்கா
1849	ஊக்கு	வால்டேர் ஹண்ட்	அமெரிக்கா
1851	இன்டக்ஷன் காயில்	ரும்கார்வ்	ஜெர்மனி
1852	விசைபெருக்கி	வோட்டீஸ்	அமெரிக்கா
1855	காற்று விளக்கு	பன்சன்	ஜெர்மனி
1856	எஃகு	மெஸ்ஸெம்மர்	இங்கிலாந்து
1858	கேபிள் கம்பி	பீல்டு	அமெரிக்கா
1861	அசையும படக்காட்சி	செல்லர்ஸ்	அமெரிக்கா
1866	டைனமைட்	நோபுள்	ஸவீடன்
1868	புல செதுக்கும் பொறி	ஹீல்ஸ்	அமெரிக்கா
1868	செல்வலாய்ட்	ஹாவாட்	அமெரிக்கா
1870	டைப அடிக்கும் பொறி	ஹோலெஸ்	அமெரிக்கா
1876	டெலிபோன்	பெல்	அமெரிக்கா
1877	மின்சார விளக்கு	எடிசன்	அமெரிக்கா
1878	ஒலிபெருக்கி	பெர்லினர்	அமெரிக்கா
1879	பணம எண்ணும் பொறி	ரிட்டி	அமெரிக்கா
1880	விஞேடைப்	மெர்ஜன் தலர்	அமெரிக்கா
1884	பௌடன்பேனா	வாட்டர்மென்	அமெரிக்கா
1885	எக்ஸ்ரே	ரோயென்ட்ஜென்	ஜெர்மனி
1885	மோட்டார் சைகிள்	டெய்மலர்	ஜொமனி
1887	மின்சார மோட்டார்	டெஸ்லா	அமெரிக்கா
1887	கிராமபோன்	பெர்லினர்	அமெரிக்கா
1888	மோட்டார் டயர்	டன்லப்	அமெரிக்கா
1888	கைக்காமிரா	ஈஸ்ட்மென்	வால்கர்
1892	வர்ணநிழற் படம்	ஐவெஸ்	அமெரிக்கா
1893	பிளாக் எடுத்தல்	ஈவெஸ்	அமெரிக்கா
1895	போட்டோ எலக்ட்ரிக்மின்கலம்	எங்ஸ்டர் ஜெய்டல்	ஜெர்மனி
1896	ரேடியம	க்யூரி அமமையார்	ஜெர்மனி
1896	கம்பில்லாத் தந்தி	ஜீ. மார்கோனி	ஜெர்மனி
1897	டீஸல்பொறி	டீஸல்	அமெரிக்கா
1900	நீர்மூழ்கிக் கப்பல்	ஹாலண்டு	அமெரிக்கா
1903	ஆகாயவிமானம்	ரைட் சகோதரர்கள்	அமெரிக்கா
1929	பென்சிலின்	அலெக்ஸாண்டர் பிளாமிங்	அமெரிக்கா
1930	பிளாஸ்டிக்	காராதெர்ஸ்	இத்தாலி
1941	அணுகுண்டு சக்தி	பெர்மி	இங்கிலாந்து
1914	ஸ்டெபின் லெஸஸ்டீல்	பிரார்லி	அமெரிக்கா

(இவையாவும தொகுக்கப் பெற்றவை)

3 - MAY 1956

EXCURSIONS



Staff Excursion-At Nandi Hills



At Poondi Reservoir



I Form A, B, C at Ganga Soap Works, Adayar

IV Class at Meenambakkam Aerodrome

3 - MAY 1956

Our School Cabinet



Staff Council

ASSOCIATION SECRETARIES & ACTIVITIES

Pupils who participated in the Demonstrations.

U. N. O. Day Celebration.

"ஓர் இரவு"

நடு இரவு! பயங்கர இருள்! உலகம் ஓய்ந்து கிடந்தது. தூக்கத்தின் அரவணைப்பிலே மக்கள் அசைவற்றுக்கிடந்தார்கள். எங்கும் ஒரே நிசப்தம். பேய்க்காற்றால் அசைந்தாடும் மரக்கிளைகளின் சலசலப்பு—ஆந்தைகளின் அலறல்-தூரத்து நாய்களின் அழுகுரல்-அந்த இரவைப் பன்மடங்கு பயங்கரப்படுத்தியது.

புரண்டு புரண்டு படுத்தும் நித்திரை வராமல் நான் தவித்துக்கொண்டிருந்தேன். என்றுமில்லாத ஓர் கலவரம்-இனம் தெரியாத ஓர் கவலை என்னை வாட்டி வதைத்துக்கொண்டிருந்தது. எழுந்து உட்கார்ந்தேன். என் சிந்தனை ஓயவில்லை. மறுபடியும் படுத்தேன்-பயனில்லை. கண்களைத் திறந்தேன். என் தாயார் நிம்மதியாக தூங்கிக்கொண்டிருந்தார்கள். சுவற்றிலே தொங்கிக் கொண்டிருந்த கடிகாரம் இருமுறை டங் டங் என்று அடித்து ஓய்ந்தது. நான் எழுந்தேன். பக்கத்து அறையின் விளக்கை பொருத்திவிட்டு ரவீந்திரநாத் தாகூர் எழுதிய கீதாஞ்சலி என்ற புத்தகத்தோடு மேசையின் அருகில் உட்கார்ந்தேன். என் கைகள் புத்தகத்தின் ஏடுகளை புரட்டிக்கொண்டிருந்தன. என் கண்கள் வரிகளின்மேல் ஓடிக்கொண்டிருந்தன. ஆனால் என் மனம்—அது நிலை கொள்ளாமல் தவித்துக்கொண்டிருந்தது. புத்தகத்தை மூடிவைத்துவிட்டு தெருக்கதவைச் சாத்தியபடி வெளித் திண்ணைமேல் உட்கார்ந்து கொண்டேன். கரிய இருளின் பயங்கரப் போர்வையிலே உலகம் மறைந்து கிடந்தது. கண்களுக்கு ஒன்றுமே புலப்படவில்லை. வசந்த காலத்தின் மென்காற்று சில்லென்று வீசியது. நேரம் ஓடிக்கொண்டேயிருந்தது.

திருடன்! திருடன்!! என்று என் தாயார் அலறிய குரல் கேட்டுத் திடுக்கிட்டெழுந்தேன். என் கால்கள் வேகமாக வீட்டுக்குள் ஓடின. ஆம்! திருடன் தான். அவன் ஓட முயன்றான். நான் பின் தொடர்ந்தேன். அவன் திடீரென்று திரும்பினான். விளக்கொளியிலே அவன் உருவம் நன்றாகத் தெரிந்தது. அவன் என்னை வெறிக்கப்பார்த்தான். ஓடவில்லை-நான் தாவிப் பிடித்துக் கொண்டேன். பரட்டைத் தலை—பயங்கரக் கண்கள்-நீண்ட தாடி—என்றாலும் அவன் ஓர் வாலிபன் என்பது சொல்லாமல் விளங்கின. அவனது முரட்டுக் கரங்கள் என் இரும்புப் பிடியிலே தவித்துக்கொண்டிருந்தன. திருடன்! என் வாய் முணுமுணுத்தது. உழைக்காமல் மற்றவர் பொருளை கொள்ளையடிக்கும் கொடியவன். என் ஆத்திரம் அளவை மீறியது. அவன் வெறிக்கப் பார்த்தான். நான் மிருகமானேன். மறுகணம் அவன் மண்ணில் சாய்ந்தான். என் தாயாரின் தாய்மையுள்ளம் தவித்துக்கொண்டிருந்தது. அவர்கள் பதுமை போல் அசையாமல் நின்றுவிட்டார்கள். தரையின்மேல் புரண்டுகொண்டிருந்த அவன் நா வறண்டு கிடந்தது. காய்ந்துகிடந்த உதடுகளை நாக்கினாலே ஈரப்படுத்த முயன்றுகொண்டிருந்தான். என் தாயார் ஓடிப்போய் ஒரு பாத்திரத்தில் தண்ணீர் கொண்டுவந்து என் கைகளிலே கொடுத்தார்கள். நான் வாங்கி அவனை குடிக்கச் செய்தேன்.

அவன் கண்களைத் திறக்க முயன்றான். முடியவில்லை. நேரம் ஓடிக்கொண்டேயிருந்தது. அவன் ஏதோ முணு முணுத்தான். நான் மெதுவாக அருகில் போனேன். 'மோகன்' என்றான் சத்தமாக. எனக்கு தூக்கி வாரிப் போட்டது. நள்ளிரவிலே வந்த கள்ளனுக்கு என் பேர் எப்படி தெரியும்? அவன் தலையை உயர்த்தி என் மடியின்மேல் வைத்துக்கொண்டு நீ யாரப்பா என்றேன் ஆச்சரியத்தோடு. அவன் கண்களிலே கண்ணீர் புரண்டது. அவன் மெதுவாகச் சிரித்தான். என் ஆவல் அதிகமாகியது. நீ திருடனா என்றேன். அவன் பெருமூச்சோடு பேசினான். "ஆம்! திருடன் தான்! இதுவரை நான் எவரிடமும் அகப்படவில்லை. நீ மட்டும் வேறு மனிதனாக இருந்திருந்தால் என்னைப் பிடித்திருக்கவே முடியாது. அப்படி பிடித்திருந்தாலும் ஒரே வினாடியில் கொன்று விட்டு தப்பிப் போயிருப்பேன். மோகன்! விளக்கொளியிலே உன்னை ஒரு நொடியில் புரிந்துகொண்டேன். என் கால்கள் தடுமாறியது. உன்மேல் எனக்கிருந்த அன்பு என்னை

தப்பி ஓடாமல் செய்து விட்டது” என்றான். என் நிலை கலங்கியது. நீ யாரென்று மறைக்காமல் சொல் என்றேன். நான் சொன்னால் நீ நமபமாட்டாய் மோகன். சுமார் எட்டு ஆண்டுகளுக்கு முன் உன்னோடு எட்டாவது வகுப்பிலே ஓர் பகட்டுக்கார சிறுவன படித்துக் கொண்டிருந்தானே நினைவிருக்கிறதா ?

“நன்றாக நினைவிருக்கிறது. பாஸகரன். பெரிய பணக்காரனின் மகன வேளைக்கொரு உடை உடுத்தி நாளைக்கொருவிதம வருவான்”.

“ஆம் மோகன் அதே பாஸ்கரன்தான் நான்” என்றான். என்னால் நமபமுடியவில்லை. பழங்கால நினைவுகள் என் கண்முன் ஓடின எவ்வளவு பெரிய மாற்றம. பிறகு! என்றேன். அவன் கதையைத் தொடர்ந்தான். “பணச் செருக்கால் படிபபை நிறுத்தி விட்டேன். சில நாட்களுக்குள் என் தந்தை இறந்துவிட்டார். சேர்ந்து வந்த செல்வம் தேய்ந்து மறைந்தது. நான் ஏழையானேன். உற்றாரும் உறவினரும் என்னை ஏறெடுத்தும் பார்க்கவில்லை. காலம் என்னை கள்வனாக்கிவிட்டது. பிறகு தான் உண்மையான செல்வம எது என்பதை உணர்ந்தேன். அன்று நீ ஏழை; நான் பணக்காரன். ஆனால் இன்று நீ பணக்காரன், நான் திருடன். உன் கல்வி உன்னை உயர்த்தியது. என் செல்வம் என்னை கைவிட்டது” என்றான். கல்வியின் காலடியிலே செல்வம் உருண்டு கிடந்தது. இரவு ஓடி மறைந்தது. தவறை உணர்ந்த என் நண்பன் திருந்திவிட்டான். அன்று என்னை விட்டுபபிரிந்த அவன் எங்கோ சென்று மறைந்துவிட்டான். இனி அவன் திருட மாட்டான்-அவன் நல்லவன்.

D. தேவதாஸ

மூடத் தவளைகள்

ஒரு குளத்தில் தாமரைப பூக்கள் அழகாக பூத்திருந்தன. அநதக் குளததில் பல தவளைகள வசிதது வந்தன. தாமரைப் பூக்களில் தேன் நிரமபி இருந்ததால அததேனைக் குடிக்கப பல தேனீக்கள வநது அந்தத் தாமரை பூக்களின் மேல உட்கார்ந்து கொண்டிருந்தன. அபபோது ஒரு தவளை “தேனீக்களே! நீங்கள் ஏன் இஙகு வநது வீணாக ரீஙகாரம செய்து எங்களைத் தொந்தரவு கொடுக்கிறீர்கள். நாங்கள உஙகள இருபபிடம வந்து தொந்திரவு கொடுக்கிறோமா ?” என்றது.

அதறகு தேனீக்கள் “அண்ணா நாங்கள் வீணாகச சுற்ற இங்கு வரவில்லை. வேலையாகத் தான் வந்திருக்கின்றோம” என்றது.

அதறகுத் தவளை “இங்கு உஙகளுக்கு என்ன வேலை” என்றது; “இநதந் தாமரைப பூக்களில நிறைய மதுரமான தேன் இருக்கிறது. அந்தத் தேனைக் குடிப்பதறகாக நாங்கள் தினந் தோறும் இங்கு வந்து கத்துகின்றோம்” என்றது.

“ஆஹா! தேனா! தேனா! இந்த பூக்களிலா எங்களுக்குத் தெரியாதே” என்று எல்லாத் தவளைகளும் சொல்லிற்று.

தேனீக்கள்; “நீஙகள் சொல்வது சரிதான் அருகில் தேன் இருந்தும நீங்கள அதை உணர்வதில்லை. உலகில்கூட சிலர் கண் இருந்தும் காணாமலும காதிருந்தும கேளாமலும இருக்கிறார்கள்.”

“கடவுள் இந்த உலகில் நமக்குத் தந்திருக்கிற அழகுகளையும், இன்பங்களையும் அனுபவிக்க தகக அறிவு வேண்டாமா ?” என்றன.

தவளைகள வெட்கத்தால் தலைகுனிந்தன.

தேனீக்கள் தேனைப் பருகித் தென்றலோடு பறந்து சென்றன.

K. பாலசுந்தரம. I F. C.

மணி அடிக்குது! ஓடிவா!!

மணி அடிக்குது மணி அடிக்குது மாணவனே ஓடிவா
மாநிலத்தில் துலங்கிட நீ மாண்புடனே ஓடிவா
கரையில்லாக் கல்வி கற்க கருத்துடனே ஓடிவா
கற்ற வழி நீ நடக்க கடவுளையும் போற்ற வா
(அதில் நிற்க நினைவு கொண்டு வா)
ஒழுக்கம் உண்மை அடக்கம் உதவி
உயர்ந்த இப்பெரும் பண்பினை
உள்ளம் தனில் கொண்டு நீ ஓங்கிடவே ஓடிவா.

ஜோதி. I. B

அடையாற்றின் ஆலமரம்

பெரிய மரம், பெரிய மரம்
பெஸன்ட் அம்மை வளர்த்த மரம்
பரந்த, முதிர்ந்த ஆலமரம்
ஆயிரம் பேர் தங்கும் மரம்
பார்த்துப் பார்த்துக் கண் களிக்கும் மரம்
அடையாறு சங்கத்தில் இருக்கு மரம்
பார்க்க இன்பம் பயக்கும் மரம்.

R. கோவிந்தராஜ். III. C.

பள்ளி சாரணப் படை

இவ்வாண்டைச் சாரணர்கள் மகிழ்ச்சியுடன் சுறுசுறுப்பாய் கழித்தனர். அவர்கள் ஒழுங்காயும் கிரமமாயும் சந்திக்காவிடினும், அப்போதைக்கப்போது ஏற்பட்ட பலவேறுபட்ட வாய்புகளின் நிமித்தம் அடிக்கடி கூடினர். இவ்வாண்டின் அலுவல்களை நாங்கள் ஜூலை மீ 8-ஆம் உ ஆரம்பித்தோம். அப்போது 2 தினங்கள் திருவான்மியூர் என்ற விடத்தில் முகாம் இட்டு கிராம சேவை செய்தோம். திருவான்மியூருக்கும் குப்பத்திற்கும் செல்லும் பாதையை அமைப்பதில் சிறுவர்களாகிய எமக்கும் வாய்ப்பளித்த கனம் டாக்டர் கான் அவர்களுக்கு எமது உளம் கனிந்த நன்றி.

வழக்கம்போல் வேளாவேளைகளில் எம் பள்ளிக்கு விஜயம் செய்த பெரியார்களுக்கு நாங்கள் வரவேற்பு மரியாதை செலுத்தினோம். உலக சுகாதார தினக் கொண்டாட்டத்திலும், வனமஹோற்சவக் கொண்டாட்டத்திலும், புயல் நிவாரண நிதிக்கென பொருள் திரட்டும் சேவையிலும் பங்கெடுக்கும் பேறு எமக்குக் கிடைத்ததைப் பற்றிப் பெரு மகிழ்ச்சியடைகிறோம்.

ஆலந்தூர் சங்கீத சபா திறப்பு விழாவின் போது விஜயம் செய்த நம் அமைச்சர் கனம் பக்தவத்சலம் அவர்கட்கும், இவ்வூர் பஞ்சாயத்து போர்ட் தலைவர் காலஞ் சென்ற முத்து குமாரசாமி நாயகர் அவர்களது படத்திறப்பு வைபவத்தின் போது விஜயம் செய்த அமைச்சர் இராமசாமி படையாச்சி அவர்களுக்கும் அணி வகுப்பளித்து மரியாதை செய்யும் பாக்யம் எமக்கு கிடைத்தது. மேலும் சாரண இயக்கத்தின் உலக காரியதரிசி போன்ற பெரியார்களை விமான நிலையத்தில் வரவேற்கவும், வழியனுப்பவும் உரிமை பெற்றோம். உலகில்

ஓட்டப் பந்தயத்தில் முதலிடம பெற்ற கனம் ஜெஸி ஓவன் என்னும் உலக புகழ் பெற்றவரை விமான நிலையத்திற்குச் செல்லும் வழியில் சந்திக்கும் பாக்கியம எமக்குக் கிடைத்தது.

அக்டோபர் 28. 29-இல் குரோம்பேட்டையில் நடந்த சாரணர் பயிற்சி முகாமில் எம பள்ளி சாரணரும சேர்ந்து சாரணப் பயிற்சி பெறறனர். இவ்வாறு எம பள்ளிச் சாரணர். உண்மையோடும ஊக்கத்தோடும் உழைக்கும உயரிய பயிற்சியை இவ்வாண்டில் பெற்றனர். இவ்விதப் பயிற்சியை அளித்து சிறுவரையும் சிறுமியரையும, பாரத மாதாவிற்கு அணியும் அலங்காரமும் ஆகதிகழச் செய்வதே இவ் வியக்கத்தின் நோக்கம். அங்ஙனமே திகழ ஈசன் அருள புரிவாராக.

"ஈன்றபொழுதின் பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்றோனெனக் கேட்டதாய்."

G. V. Pauliah,
Scout Master.

Notes

On the re-opening of our school in June 1955, we heartily welcomed into our midst 202 new students and Sri Palanimuthu as Tamil Pundit in place of Sri. S. Arunagiri who left us to join the staff of Corley High School, Tambaram. A little later, when Sri. Ezekiel Sawyer left the school to join the C. L S , Madras, he was suitably succeeded by Sri. D. Devadason as a clerk By now the new cnes have become old enough and also have done well enough.

* * *

July is the month when we usually settle down after the brisk elections of student secretaries, leaders, and representatives to School Cabinet, School Parliament etc., Soon came the call from the scouts of the R. B. C. C C. High School, Perambur. They came to our school for a Scout Camp for two days in which our scouts also joined. It was an occasion for mutual joy and help

* * *

On 9th August 1955, the World Health Day was celebrated in our School under the auspices of the local panchayat board. There was a large gathering of pupils and teachers and members of the local administration with only a very few members from the public. All the same it was a delightful morning!

* * *

Sri. Karunakara Menon, B.A., B.L., of Guindy gave the school a message on the Independence Day at the Flag-Hoisting function. His talk was homely, highly instructive and useful for all of us. The usual distribution of pori over, it was announced to them that it was a holiday for them!

* * *

October and November are usually busy months for us. On the 15th October 1955, we had the greatest privilege of welcoming into our midst the world's fastest sprinter, Mr. Jesse Owens who very kindly responded to our humble invitation and did come to meet us on his way back from Madras City. He promised that he could spare only five minutes but to our very great surprise, he stayed with us for 35 minutes! Our staff

and pupils were thrilled at his simplicity and sincerity and at the lovable way he mixed and moved with children, during this preciously short time. He spoke to us and said that he would never, never forget the reception we gave him at the wayside. Before taking leave of us, he told me "I take leave of you, Mr. Principal Take care of these children" One can discover and also discern how richly meaningful these words are to an educator, and a teacher! On a later occasion, I was told by the late Mr. C. C. Abraham Principal of the Y. M. C. A. College of Physical Education, Saidapet that Mr. Jesse Owens reported at the aerodrome just before taking off that the happiest of the receptions he had in Madras was the one by the School Children at St. Thomas' Mount—(obviously referring to our School). We are very grateful to Mr. Jesse Owens for his visit to us.

* * *

On the 17th October 1955, a group of pupils gave a broadcast lesson on 'Games for children' through the A. I. R. Madras.

* * *

About 75 scouts, guides, Blue Birds, and Cubs went on a two-day Scout Camp to the Chambers Gardens, Chromepet on the 28th and 29th Oct. 1955. They joined their comrades from Corley High School and had a very delightful time at the Camp.

* * *

On the 24th Monday there was an Essay Contest opened to all the pupils of our school on 'United Nations Organisation'. Vijayaraghavan of Form III A and Jakul Batcha of Form II A came first and second in the contest respectively. On Thursday the 27th Oct. 55 at the celebration of the United Nations Day in the school, Miss Macqueen M.A., Principal, Gnanodhaya Training School. St Thomas Mount. spoke on the 'United Nations Organisation'. Dr. Haji G. Osman Khan presided. The winners of the essay contest were given prizes. An entertainment followed when a few boys and girls enacted very interesting and instructive items concerning the functions of the U N. O.

* * *

A number of very important events took place in the month of November towards its end. On the 25th of Nov. 55 all the staff and the pupils in their school uniform welcomed the King and Queen of Nepal as they passed by with flowers and garlands on the main trunk road. our greetings were cheerfully acknowledged by the distinguished Royal Visitors.

* * *

On the 26th of Nov. 55 a Retreat for the Christian Teachers was held at the Goodlet High School, Sholinghur. Mr J. A. Dorairaj, B.A., L.T., Headmaster, Rev. Jeevanandam, Presbyter of the Pastrate. Rev. C. V. Coombes, Manager of the Church and Mr. S. Y. Raj, Assistant, helped us in conducting devotional meetings. It was a lovely place and we had a very useful time at the retreat.

* * *

Again on the 28th Nov. 55 we had the special previllege of extending a warm welcome to the Russian Prime Minister and his party at the main road A tastefully decorated pandal was errected across the road to welcome the distinguished

leaders of world fame. Many children who stood by with garlands were disappointed when they could not actually garland them, owing to traffic regulations.

* * *

On Monday the 19th December 1955 a Christmas Carol Service was conducted in our school. The message on the occasion was given by Sri. F. Jeganathan B.A., B L., A Nativity play was staged by the pupils. A number of carols and songs were sung by groups representing the various houses. A few old boys also participated in the service.

* * *

We met again in January after the brief Christmas holidays for our last term of work for this year with new hopes and decisions for a new year.

* * *

Our annual school sports were held at the Mohite Stadium on 10th and 11th February under the presidentship of Sri. S. N. Mathur M.A, Military Estates Officer, Fort St. George, Madras. Mrs. Mathur distributed the prizes and trophies. Mr. Mathur congratulated the staff and the pupils for the orderly manner in which the events were conducted and he remarked that he would do his best in getting a play ground for the school Earlier the athletic meet was declared open by Shri K. R. K. Menon B. Sc., B. L. Cantonment Executive Officer, St. Thomas Mount. We are grateful to them for their interest and patronage.

A Delegation of five pupils accompanied by Mr. Moses Ebenezer (Secretary C. M. A.) attended Hi-y conference held at Corley High School, Tambaram on 24th, 25th and 26th February 1956. This was organised under the auspices of the Y. M. C. A.

* * *

The School Excursion has come to stay as an annual feature in the life of the school. On the 9th and 10th of March 1956 about 115 pupils and many teachers went on an excursion to Thirukalikunram and Mahabalipuram. Many were responsible for the success of this excursion. The travellers Bungalow situated as it is at a beautiful spot a little away from human habitation afforded an excellent place for stay. Needless for me to point out that every one of them enjoyed the bushes, stone carvings, the light house, the beach, the hills, and best of all, the food! I thank every one who organised this trip and made it a success.

* * *

The activities of this year terminated with the celebration of the 92nd School Day on Saturday the 31st March 1956. Sri. M. Perumal Mudaliar, M.A., L.T., Principal of the Teachers College, Saidapet presided and delivered the address. Miss Macqueen M.A., Principal, Gnanodhaya Training School, St. Thomas Mount, distributed the prizes and trophies to the winners in the various contests held during the year.